
பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00




வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 05 வெள்ளிக்கிழமை (18.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 120

# தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மூதூரில் நேற்று பெரும் கலவரம்

## மூவர் கொலை; 6 பேர் படுகாயம் வீடுகள், வாகனங்கள் தீக்கிரை

(மூதூர் நிருபர்)

**மூதூர் பகுதியில் பாலத்தோப்பு என்ற இடத்தில் நேற்று மாலை தமிழ், முஸ்லிம் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் காயமடைந்தனர். அப் பகுதியில் உள்ள முப்பது வீடுகள் மற்றும் இரண்டு வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இச் சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து நேற்று மாலை 6மணி முதல் இன்று அதிகாலை 6மணி வரை அங்கு உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.**

மூதூர் பகுதியில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும், ஐ.தேசிய கட்சியின் திருமலை மாவட்ட எம்.பி மஹ்ரூப்பிற்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து நேற்று மாலை 5.30மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூதூர் பாலத்தோப்பு பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தை அடுத்து படுகாயம் அடைந்த ஆறு பேரில் மூவர் தோப்பூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மேலதிக சிகிச்சைக்காக கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை வைத்திய

(10ம் பக்கம் பார்க்க)

## சைவச் சிறுவர் இல்லச் சிறுவர்கள் உடுவில் வாழ்வகத்தில் இணைவு

### நீதிபதி கே. அரியநாயகம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைச்சேர்ந்த 61 சிறுவர்களையும் உடுவிலில் உள்ள வாழ்வகத்தில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி கே. அரியநாயகம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சைவச் சிறுவர் இல்லம் தொடர்பாக இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்கள் மற்றும் பேரவையின் உறுப்பினர்கள் நேற்று சாவகச்சேரி நீதிவான் அரியநாயகத்தை சாவகச்சேரி நீதிமன்றில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் அமைச்சர் தி. மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்

(10ம் பக்கம் பார்க்க)

## எல்லா இனங்களும் ஏற்கும் தீர்வை இந்தியா ஆதரிக்கும்

### அமெ. மாநாட்டில் இந்தியத் தூதுவர் உரை

(வாசிங்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எல்லா இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இறுதித்தீர்வொன்றை இந்தியா ஆதரிக்கும் என்று வாசிங்டனில் நடைபெற்ற முன்னோடி மாநாட்டில்உரையாற்றிய அமெரிக்காவிற்கான இந்தியத் தூதுவர் லலித் மன்சிங் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் சகல பிரிவினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியற் தீர்வொன்றை இந்தியா ஆதரிக்கும். இலங்கையின் இறைமை, அதன் பாதுகாப்பு, அதன் ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றைக் காப்பதில் இந்தியா பற்றுறுதியுடன் செயற்

(10ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.மு. அரசுக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை

### கட்சியின் அதி உயர் பீடத்தில் முடிவு

(நமது நிருபர்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடம் ஏழு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து காலக்கெடு விதித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி எம்.பி மஹ்ரூப் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவதூறு செய்யும் வகைகளில் தெரிவித்த கருத்தை அடுத்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடம் நேற்று காலை கூடி இக்காலக் கெடுவை விதித்துள்ளது.

இக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றுவதுடன் பிரதமர் ரணில்

(10ம் பக்கம் பார்க்க)

## ரவூப் ஹக்கீமுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம் முஸ்லிம் விவகார அமைச்சராகப் பதவி வகிப்பதை எதிர்த்து நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை முஸ்லிம் விவகார அமைச்சர் பதவிக்கு ரவூப் ஹக்கீம் தகுதி அற்றவர் என்றும் எனவே அவர் உடனடியாக அப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் மேல் மாகாண ஆளுனர் அலவி மௌலானா கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அலவி மௌலானா கருத்துக் கூறுகையில் முஸ்லிம் விவகார அமைச்சர் பதவியில் ரவூப் ஹக்கீம் இருப்பதை

(10ம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சி தேர்தல்

## கூட்டமைப்புடன் இணைந்தே கூட்டணி போட்டியிடும்

### ஜோசப் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதைப் பார்க்கிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது சமாதானப் பேச்சுக்களுக்கு மேலும் பலன் சேர்க்கும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஏனைய தமிழ்க் கட்சிகளும் இதற்கு ஆதரவு வழங்குவார்கள் என தான் நம்புவதாக தெரிவித்த ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி விடுதலைப்புலிகளுக்கு தற்போது சர்வதேச ரீதியில் ஆதரவு கிடைத்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இதே சமயம் இது தொடர்பாக ஆராய்வதன் பொருட்டு நாளை சனிக்கிழமை கூட்டமைப்பிற்கும் தமிழீழ

(10ம் பக்கம் பார்க்க)

## இந்துசமய பேரவை செயலர் நேற்று பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சைவச் சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இந்துசமய பேரவை செயலாளர் சி. சக்திகிரீவன் நேற்றுக் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இவரின் பிணை தொடர்பான மனுவை இந்துக் கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

இதனை அடுத்து 25,000 ரூபா காசுப் பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (இ-4-43)

## பிரதமரை மூதூருக்கு அழைப்பது ஹக்கீமின் முறையற்ற செயல்

### கண்டிக்கிறார் அமைச்சர் நூர்தீன்

(நமது நிருபர்)

மூதூரில் இடம்பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அங்கு அழைப்பது தேவையற்ற விடயமென்று முஸ்லிம் காங்கிரஸின் அதாவுல்ல அணியைச் சேர்ந்த வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மூதூர் சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப், அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதவி விலக வேண்டும் என்று கூறியதை அடுத்து எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மூதூருக்கு வரவேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதமரை

(10ம் பக்கம் பார்க்க)

# கரும்பின் கடுமையும் இரும்பின் இளகிய தன்மையும்

## ஈசன் விரும்பு மனம் கொண்டவர்க்கு ஒன்றேயாம்


திருநாவுக்கரசுநாயனார் சிவ பெருமானிடத்தில் ஒரு வேண்டுதல் செய்கின்றார். அது திருவாரூரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் எம்பொருமானிடத்தில் எடுத்துரைக்கும் முறைப்பாடு போல் முன்னிரு அடிகள் அமைந்துள்ளன.

'கரும்பு பிடித்தவர் காயப்பட்டார்- கரும்புச் சாறு இனிமையானது, மென்மையுமானது. மன்மதனுடைய கைவில் கரும்பாலானது.

### மெய்யுணர்த்தல்

சிவபிரான், சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கு மெய் யுணர்வை உணர்த்தி திருவுளங் கொண்டார்.கையிலை மலையில் கல்லால விருட்சத்தின் கீழ் தட்சணா மூர்த்தியாகத் திகழ்ந்தார். இருடிகள் நால்வருக்கும் வாக்கிறந்த பூர ணமாய் மறைக்கப்பால் எல்லாமாய அல்லதுமாய் இருந்ததனை இருந் தபடி இருந்து காட்டிச் சொல்லாமற் சொல்லிச் சின் முத்திரை உணர்த் தினர். சூரனால் துன்பத்தைப் பொறுக்காத தேவர்கள் சிவபி ரானுடைய மௌனத்தை கலைக்க மன்மதனை அனுப்பிவைத்தார்கள்.

மன்மதன் சிவபிரான் மீது மலர்ப் பாணம் தொடுக்கக்கரும்பு வில்லைக் கைக்கொண்டான். பெருமானுடைய நெற்றிக்கண்பொழி கனலினால் காமன் நீறானார். காயம் -உடம்பு, பட்டார்- அழிந்தார். மென்மையான கரும்பினால் விளைந்த வன்மைச் செய்கை இது.



### சண்டேசுரர்

திருச்சேய்ஞலூரில் மண்ணியாற் றங்கரையில் மணல்கோயில் கட்டிச் சிவபூஜை செயதாா. சண்டேசுரா நாயனார் தனயன் பால் உடுப் பதைத்தடுக்கத் தாதைகாலால் இடறினான். சிவ அபராதத்திற்கு தண்டனையாகத் தாதை தாள தடிய விசாரசருமர் இரும்புக் கோடரி யைக் கைக்கொண்டார். இரும்பு பிடித்தவருக்கு இறைவன் சண் டேசுர பதம் தந்து இன்புறச் செய் தான்.

மென்மையான கரும்பு பிடித்தவர் செய்கை கொடிது. இரும்பு பிடித் தவர் செய்கையும் கொடிது.ஆனால் மன்மதன் சிவபிரானுடைய மோனத்தை நீக்க முயன்றது தவறு. விசார சருமர் சிவ பூசையில் வருந்த வறைத் தடுக்க இரும்பு பிடித்தார். கைக்கொண்டது கரும்போ அல்லது இரும்போ என்பதல்ல. என்ன நோக் கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை உணரும்போது தான் பட்டதும் இன்புறப்பட்டதும் நடந்தது.

### விரும்பு மனம்

திருநாவுக்கரசு நாயனார் ஆரூர்ப் பெருமானிடத்தில் வேண்டுகின்றார்.

**வெள்ளி நற்சிந்தனை**

'மொட்டவிழும் குளிர் சோலை சூழ்ந்த அஸியாரூர் அம்மானே நான் உன்னை விரும்புவதை விடநீ என்னை விரும்பு மனத்தையான் வேண்டுவன்' அப்படி விரும்பு மனம் இருந் ததனால கருவியின் கடுஞ் செயலை கருத்தில் கொள்ளாமல் விரும்பு மனத்திறகு உகந்த பரிசினை உவந்தாய்.

என்மீது விரும்புமனம் உனக் கிருந்தால் நான் கரும்பைக்

**சிவ. சண்முகவடிவேல்**

கொண்டால் என்ன இரும்பை இறுகப்பற்றினால் என்ன இன்புறவே செய்வேன் என் னும் பொருள் தொனிப்பைத் தாங்கி நிற்கின்றது தேவாரம்.

'கரும்பு பிடித்தவர் காயப் பட்டாரங்கோர் கோடலி இரும்பு பிடித்தவர் இன்புறப்பட்டார். இவர் கள் நிற்க அரும்பவிழ் தண் பொழிலில் சூழணி ஆரூர் அமர்ந்த வெம்மான் விரும்பு மனத்தினை யாதொன்று நான் உன்னை வேண்டுவனே.

## மேலதிக போக்குவரத்துச்சேவை

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டிற்காக சொந்த ஊருக்கு சென்ற பயணிகள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி வருவதற் காக மேலதிக பஸவண்டிகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இவ்வாரம் நீண்ட விடுமுறை நாட்கள் இருந்தமையினால் போக்குவரத்துச் சேவைகள் குறை வாக இடம்பெற்றன. இதனால் மேற்படி பயணிகள் தலைநகா மற்றும் தமது தற்காலிக இருபபிடங்களுக்கு திரும்புவதற்கு வசதியாகவே இவ்வார இறுதியில் மேலதிகமாக பஸ்வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த உள்ளதாகவும் போக்கு வரத்துச்சபை மேலும் தெரிவித் துள்ளது. (உ-10)

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்சயன்ஸ் அக்டமியின் முதலாம தவணைக்கான பரிசளிப்பு விழாவும் சிறந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிப்பும் இன்று பி.ப 4.30 மணிக்கு நிறுவன மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார். (உ)

## மாலே ஆசிரியர்களுக்கு இலங்கையில் பயிற்சி

(கொழும்பு)

மாலைதீவைச்சேர்ந்த ஆசிரி யர்களுக்கு இலங்கையிலுள்ள தேசிய கல்வி நிறுவகத்தில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று அண் மையில் ஆரம்பிக்கப்பட்டு உள்ள தாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமும்பேராசிரியருமான ஜி. ரி. குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இத்திட்டதின் பிரகாரம் முதலா வது தொகுதி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் அண்மையில் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதி ஆசிரியர் கள் எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இதன் பின்னர் மாலைதீவைச் சேர்ந்த மேலும் 60 ஆசிரியர் களுககு ஜுன் மாதத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு தேசிய கல்வி நிறுவகத் தில் பயிற்சியை நிறைவுசெய் வோருக்கு 'உயர் ஆசிரியர் கல்வி டிப்ளோமா' சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன.

இதேவேளை,மாலைதீவில் உளள பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சிகள் வழங்கவும் தேசிய கலவி நிறுவகம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் ஆசிரியர் பயிற்சி நெறிகளுக்கு மாலைதீவில் நல் வரவேற்பு இருப்பதும் இது பொருளா தார ரீதியாகவும் இலங்கைக்கு நன்மையை ஏற்படுத்துவதும் சுட்டிக் காட்டத்தக்கது. (உ-10)

## வடக்கு கிழக்கில் வரும் 3ஆண்டுகளில் 477 அபிவிருத்தித் திட்டங்கள்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மகாணத்தில் அடுத்த 3 ஆண்டு காலப் பகுதிக் குள் 477 அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக 886 கோடிரூபாவுக்கும் அதிகமான தொகை செலவிடப்படவுள் ளது.

வவுனியா,யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை,மன்னார், திருகோண மலை ஆகிய மாவட்டங்களில் இவை அமுல் செய்யப்படவுள்ளன.

கல்வி ,சுகாதார விவசாய நீர்ப் பாசனம் மற்றும் நெடுஞ்சாலை களை புனரமைத்தல் ஆகியனவற் றுக்கு இத்திட்டங்களில் முன் னுரிமை அளிக்கப்படவுள்ளது.

இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்ட பின்னர் அதன் முன்னேற்றங் களைப்பரிசீலிப்பதற்காக அரசாங் கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் மாத மொருமுறை கூடும்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் புனர் நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதற்கென நோர்வே அரசாங்கம் 27 இலட்சம் டொலர் களை நன்கொடையாக வழங் கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

உலக வங்கியின் சர்வதேச அமைப் பினால் நிர்வகிக்கப்படும் இத் திட்டங்களில் மேலும் இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த் துதல் அதன் பொருட்டு அவர்களுக் கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுதல் போன் றவையும் அடங்குகின்றன. (உ-10)

## 50ஆயிரம் இலங்கையரை ஈராக் புனரமைப்பில் ஈடுபடுத்துவதற்கு முயற்சி

(கொழும்பு)

ஈராக்கின் புனரமைப்பு பணி களுக்கென 50ஆயிரம் இலங்கைத் தொழிலாளர்களை அனுப்பிவைக்க தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஈராக மீதான அமெரிக்க யுத்தம் முடிவடைந்துள்ளதால் ஈராக் புனர மைப்பு பணிகளை மேற்கொள் வதற்கு வெளிநாட்டு தொழிலாளர் களின் உதவி தேவைப்படுவதாக அண்மையில் வெளியான தகவல் களை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை,மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆண்தொழிலாளர் களை அனுப்பி வைப்பதற்கு இது ஒரு சிறந்த தருணம் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கருத் துத்தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரை தொழில் அமைச்ச் மகிந்த சமரசிங்க விரைவில் சந்தித்து இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த வுள்ளார். (உ-8)

## புலிகளுக்கான உடன்பாடுகளை அமுலாக்குமுன் மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்படும்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பேசி எட்டப்படும் எந்தவித உடன் பாடுகளும் மக்களின் கருத்துக் கணிப்பின் மூலம் அங்கீகரிக்கப் பட்ட பின்னரே செயற்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச் சாளர் ஜி.எல். பீரிஸ் அகில இலங்கை முஸ்லிம்இளைஞர் முன்னணி அண் மையல் ஏற்பாடு செய்திருந்த கருத் தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள் ளார்.

பீரிஸ் அங்கு தொடர்ந்து பேசு கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசு நடத்தி வரும் பேச்சு வார்த்தை முஸ்லிம்களுக்கு ஒரு போதும் பாதகமாக அமைய மாட்டாது.

சமாதான முயற்சியின் பயனாக தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மீள் குடியேற்றம் மற்றும் புனர் வாழ்வு நடவடிக்கைகளால் முஸ்லிம் களும் பயனடைவார்கள்.

அத்துடன் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விவாதிப் பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது முன்வந்துள்ளார்கள்.

முஸ்லிம்களுக்கு சொந்தமான வயல்களில் அவர்கள் விவசாயத்தை மேற்கொள்ளவும் விடுதலைப் புலிகள்



இணக்கம் தெரிவித்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார். (உ-10)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வு கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் அரசு படை களினால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு சித் திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு பாதிப்புற்றவர்களுக்கு தமிழா புனர்வாழ்வுக்கழகம் உதவித் திட்டங் களை மேற்கொள்ளவுள் ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுதலையாகி உடல் உள பாதிப் புக்குள்ளானவர்கள்82/1,கே.கே. எஸ். வீதி,கொக்குவில் என்னும் முகவரி யில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ் வுக் கழக யாழ் மாவட்டப் பணிமனை யுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (உ)

## விண்ணப்பம்கோரல்

(கொழும்பு)


நாடளாவிய ரீதியில் அரசாங் கப்பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரிய கலாசாலைகளில் இரண்டு வருடப்பயிற்சிகளை வழங்குவதற் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.வடக்கு-கிழக்கு மாகாண மேல திக கலவிப்பணிப்பாளர் சீ.இராசையா அறிவித்துள்ளார்.

மாகாண கல்விப்பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க அங்கீ காரம் பெற்றுள்ள தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களும்இதற்கு விண்ணப் பிக்கமுடியும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 21ஆம்திகதிக்கு முன்னர்,பிரதம ஆணையாளர் ஆசிரியர் நிர்வாகக்கிளை, மனித வள அபிவிருத்தி,கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு இசுறுப் பாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப் பிவைக்கப்படவேண்டும். (உ-10)

**மானிப்பாய் மருதடியான் அற நெறிப் பாடசாலையில் நடை பெற்ற வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பண்ணிசை ஆசிரியை திருமதி மூர்த்தியின் சேவையைப் பாராட்டி பரிசில் வழங்குவதையும் விழாத் தலைவர் அதிபர் கா.கணேசதாசன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.**





**சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இ. சிறிஸ்கந்தராசாவின் மூன்றுநூல்களின் அறிமுக விழாவில், நூலாசிரியரிடமிருந்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க. சிவாஜி நூலினைப் பெறுவதையும் அருகில் எழுத்தாளர் சிற்பி, கவிஞர் துரையர், திருமதி மங்கயற்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.**

# பயங்கரவாதத்தைக் கைவிடுமாறு புலிகளுக்கு நிபந்தனை எதனையும் அமெரிக்கா விதிக்கவில்லை

## அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் அமெரிக்கா கொண்டிருக்கும் பற்றுறுதியை பாரதூரமானதொன்றாக நோக்குவதாயின், புலிகள் பயங்கரவாதத்தை சொல்லிலும், செயலிலும் கைவிடாதநிலையில் அமெரிக்கா அவர்கள் மீதான தடை விவகாரத்தில் கண்டிப்புடன் தான் இருக்கப் போகிறது என்று இலங்கை அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்த்துப் போரிடவேண்டிய பயங்கரவாத அமைப்புகளுக்கு அமெரிக்கா வரையறைகளை குறித்துக் காட்டியிருக்கிறது. அல்-பற்றா, ஐ.ஆர்.ஏ. போன்ற அமைப்புக்களை எதிர்த்துப் போரிட அமெரிக்கா நினைத்தது. பலஸ்தீன அமைப்புக்களை- தற்கொலைப் படையினரை- கட்டுப்படுத்தி வைக்குமாறு அது யசீர் அரபாத்திடம் வற்புறுத்திக்கூறியது.

சமாதான நடவடிக்கையின் ஒரு அம்சமாக ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களை கைவிட வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாவிடின் நியூயோர்க்கிற்கு வரும் ஐ.ஆர்.ஏ. தலைவர் ஹரி அடம்ஸ்சின் கைகளை குலுக்கப் போவதில்லை என்றும் அறிவித்தது.

புலிகளின் விடயத்தில் அமெரிக்க அதிகாரிகள் எவருமோ அல்லது ரிச்சர்ட் ஆர்மிரேஜோ அவ்வாறான நிபந்தனைகளை விதிக்கவில்லை. ஆயுதங்களைக் கைவிடுமாறோ, தற்கொலைப் படையைக் கலைக்குமாறோ கேட்கவில்லை. தமது இராணுவ வலிமையை அதிகரிக்கும் பொருட்டு தொன்கணக்கான ஆயுதங்களை சேர்த்துக் கொள்வது பற்றியும் அமெரிக்கா பெரிதாக ஒன்றும் கூறவில்லை.

புலிகள் சிறுவர்களை படையில் சேர்ப்பது பற்றி இராஜாங்கத் திணைக்களம் பதிவுகளை வைத்திருக்கிறது. புலிகளை சமாதான வழிக்குத் தூண்டுவதற்காக அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மனித உரிமைப் பிரச்சினைகளை முன் கொண்டுவர விரும்பவில்லை.

வடக்கு-கிழக்கில் மனித உரிமை, ஜனநாயகம் என்பவற்றில் திருப்தியற்ற நிலை காணப்படுவதால், நிதியுதவிகளை நேரடியாக அப்பகுதிகளுடன் தொடர்புபடுத்துவது சாத்தியம் இல்லை என்று ஜப்பான் மாநாட்டு நிதி விவகாரங்களில் அவுஸ்திரேலியாவும், இத்தாலியும் கருத்துக் கூறியுள்ளன.

கடந்த சுற்றுப் பேச்சுக்களில் முன்னாள் சர்வதேச மன்னிப்புச் சபைத் தலைவர் இயன் மார்ட்டின் ஒரு ஆலோசகராகவே பங்குபற்றினார். மனித உரிமை, ஜனநாயகம் போன்ற விவகாரங்கள் சில அழுத்தங்கள் காரணமாக விலக்கிவைக்கப்பட்டன என்று தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். (உ)

## ஆலயத்தில் திருட்டு

(கொழும்புத்துறை)

கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளன. (உ-51)

## தீப்பற்றி எரிகாயம்

(கிளிநொச்சி)

கானில் இருந்த பெற்றோலைப் போத்தலில் ஊற்றிய போது அருகில் எரிந்து கொண்டிருந்த குப்பிவிளக்கினால் தீப்பற்றி குடும்பஸ்தர் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சூரியன்குளம் கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னப்பெடி கந்தசாமி (வயது62) என்பவரே இவ்வாறு எரிகாயங்களுக்குள்ளானவராவார். (த-3)

## பெண் படுகாயம்

(கொடிகாமம்)

துவிச்சக்கர வண்டியில் சென்ற பெண் மீது படையினரின் ட்ரக் வண்டி மோதியதில் பிரஸ்தாப பெண் படுகாயமுற்றுள்ளார்.

கொடிகாமம் சந்தியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இவ்விபத்தில் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த இ.சுமதி (வயது 28) என்பவரே வலதுகால் முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3,81)

## யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்

# நிர்மாணப்பணிகளுக்கு வேண்டிய கல்லை இந்தியாவில் இருந்து தருவிக்கத் தீர்மானம்

## சூழல்பாதுகாப்பு மாநாட்டில் நேற்று எடுக்கப்பட்டது

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீதிகள் நிர்மாணப் பணிக்கு தேவைப்படும் கல்லை இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் தருவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்படவுள்ளதுடன், மாவட்டத்தின் உடனடித் தேவைக்கான கல்லை வவுனியாவிலிருந்தும் தரைவழியாகக் கொண்டு வருவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற சூழல் பாதுகாப்புத் தொடர்பான உயர் மட்டக் கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, சூழல் பாதுகாப்பு பிரிவுகளின் பிரதிநிதிகள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் பத்தினியம்மா, திட்டப்பணிப்பாளர் கு.சுந்தரம்பிள்ளை உட்பட பல உயர் மட்ட அரச அதிகாரிகளும் பங்கு கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் போது, யாழ்ப்பாண மாவட்டத்தின் வீதிகள் மற்றும் உட்கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்படும் கல், மண், பலகை மற்றும் மரம் போன்றவை தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகளும் நடைமுறைத் தேவைகள் பற்றியும் அவற்றினை எவ்வாறு எதிர் கொள்ளலாம் என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

அதன் பிரகாரம் உட்கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்படும் கல்லை உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள காங்கேசன்துறைப்பகுதியிலுள்ள சீமெந்துத்தொழிற்சாலை மற்றும் லங்கா சீமெந்து தொழிலகம் அமைந்துள்ள இடங்களிலிருந்து எடுப்பதற்கான விடயங்கள் பற்றி ஆராய்வதென முடிவு செய்யப்பட்டது.

அதேசமயம் மாவட்டத்தில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் கட்டுவோருக்குத் தேவையான மணலை நாகர்கோவிலுக்கு அண்மையிலுள்ள ராஜன் நகர், பூநகரியிலுள்ள கௌதாரிமுனை, அரியாலை, கச்சாய் போன்ற இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வழிவகைகள் செய்யப்படும். இதேவேளை, வீடுகள், கட்டடங்கள் கட்டும் பணியில் ஈடுபடுபவர்கள் மணலை உரிய தேவைக்காக பயன்படுத்துகின்றார்களா வென்பது பற்றி தொழில்நுட்ப அறிக்கைகளும் பெறப்படும்.

மேலும், யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற மேசன், தச்சுத் தொழிலாளர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு, மாவட்டத்தில்- 'மாவட்ட சூழல் சுற்றாடல், பாதுகாப்பு, கட்டட, தொழில்நுட்ப மதியுரைஞர் குழு' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு இம்மாதம் 23ஆம் திகதி கூடி, எவ்வகையான பயிற்சித் திட்டத்தை வழங்கலாம் என்பது பற்றி முடிவு செய்யவுள்ளது. அத்துடன் இம்மதியுரைஞர் குழுவுக்கான அலுவலகம் ஒன்றும் யாழ். அரச அலுவலகத்தில் இம்மாதம் 23ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அங்கு கருத்துரையாற்றிய போது,

சூழல் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு தனி மனிதன் கவனமெடுக்க வேண்டிய விஷயமாகும். இன்று மாவட்டத்தில் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எமது சூழலை பாதுகாப்பதற்குப் பதில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதில் பொதுமக்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது. அத்துடன் இது விடயத்தில் பொதுமக்கள், இராணுவம் மற்றும் பொலிஸாருடன் துணை போதல் என்பது பெரிய ஆபத்தை ஏற்படுத்தும்.

சூழல் பாதுகாப்பு விடயத்தில் தமிழீழவிடுதலைப் புலிகள் மிகவும் உறுதியாக உள்ளனர். இது சம்பந்தமாக தீய சக்திகள் பிழையான, தவறான கருத்துக்களை முன்வைக்கின்றன. இது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல. நாம் பழமை வாதங்களை விடுத்து நவீனத்துவ சிந்தனைக்கு மாற வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-77,43)



யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். எம்.பி என்.ரவிராஜ் மற்றும் மானிப்பாய் ப.தெ.வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் க.சற்குணலிங்கம், கல்வி ஆலோசகர் எஸ்.கணேசலிங்கம், உப அதிபர் திருமதி கு.சண்முகநாதன் ஆகியோர் காணப்படுகின்றார்கள்.

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ''சமூக இரத்தினம்'' எம்.கே.இளையப்பு தீவு முழுவதுக்குமுரிய அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதி நிர்வாக மாவட்டத்திற்குரிய சமாதான நீதவானாக இருபது வருடங்களிற்கு மேலாகக் கடமையாற்றி வருபவராகிய இவரது இந்நியமனத்தை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நீதி, சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு வழங்கியுள்ளது. (உ)

## தேரரின் பூதவுடலுக்கு நயினையில் அஞ்சலி

(கொழும்பு)

நயினை-நாகதீப ரஜமகா விகாரையின் பிரதம குருவான காலஞ்சென்ற ராஜகீய பண்டித சங்கைக்குரிய பிராமனவர்தே தம்மகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரரின் பூதவுடல் நாளை சனிக்கிழமையும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் பொது மக்கள் அஞ்சலிக்காக நயினை நாகவிகாரையில் வைக்கப்பட்டு, திங்கட்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# பாதிப்புற்ற வீடுகளை புனரமைக்க 'எக்கோ' உதவி

(யாழ்ப்பாணம்)

கொட்டடி முத்தமிழ் வீதிப் பகுதியில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க கியூடெக் 'எக்கோ' நிறுவனம் உதவிகளை வழங்கிவருகின்றது. இதனடிப்படையில் சேதமடைந்த விடுகளுக்கு இரண்டு அறைகளுக்கு வேண்டிய கூரைத் தகடுகள் வழங்கப்படுவதுடன், முற்றாக சேதமடைந்த வீடுகளுக்கு இரண்டு அறைகளுக்கு வேண்டிய ஆறு தூண்கள் மற்றும் கூரைத் தகடுகளும் வழங்கப்படுகின்றன.

முத்தமிழ் சனசமூக நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்த உதவித்திட்டத்தில் முதற்கட்டமாக 49 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. (உ)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் வல்வை மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட சுவாமி விவேகானந்தர் கண்காட்சியைத் திறந்து வைத்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுவாமி சித்ருபானந்தாவால் மாலையணிவித்துக் கௌரவிக்கப்படுகிறார்.

படம்: பரு.நிருபர்

# உயர்தரப் பரீட்சார்த்திகள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு ஏப்ரலில் பரீட்சை எழுதவிருக்கும் க.பொ.த. (உ/த) மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 10,000 வரை குறைவானதாக உள்ளதென பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கணிசமான அளவு குறைவானதாகும் என்றும் பரீட்சை ஆணையாளர் மஹிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 61ஆயிரம் மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். இவ்வாண்டு 2இலட்சத்து 51ஆயிரம் பேர்களே விண்ணப்பித்துள்ளனர்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் கடந்த ஆண்டு 2 இலட்சத்து 27 ஆயிரம் பேர்களாக இருந்தனர். இவ்வாண்டு இத்தொகை 2 இலட்சத்து 12 ஆயிரத்து 194 ஆக குறைந்துள்ளது.

இதற்கு மாறாக கடந்த ஆண்டில் 33 ஆயிரத்து 900 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றினர். இவ்வாண்டு இத்தொகை 39 ஆயிரத்து 533 ஆக உயர்ந்துள்ளது என்று பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டில் இப்பரீட்சை ஏப்ரல் முதல் வாரத்திலேயே ஆரம்பமாகி மாத முடிவிற்குள் முடிவுறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

முன்பு ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்று வந்த உயர்தரப்பரீட்சை கடந்த ஆண்டிலிருந்து தான் ஏப்ரல் மாதத்திற்கு மாற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை ஈச்சமோட்டையில் அமைந்துள்ள அதன் பணிமனையில் சங்கத்தின் தலைவர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவின் போது கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தெரிவில், செயலாளராக இ.ஆன்ல்ட், உபசெயலாளராக எஸ்.கனியூட், உப தலைவர்களாக எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, எம்.டி.தம்பிராஜா, கே.நாகேந்திரம், வி.திருஞானசம்பந்தர், பி.வின்சன் அன்ரனி, பொருளாளராக ஏ.சுரேந்திரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக ரி.முத்துலிங்கம், எம்.பிரான்சிஸ், ஜே.யூட்மன், சி.ஏ.அரவிந்தன், எம்.யோகலிங்கம், எஸ்.நொலஸ்கோ ஆகியோர் தெரிவாகினர். (உ-110)

# ஈராக் மீதான ஐ.நா பொருளாதாரத் தடையை நீக்க அதிபர் புஷ் கோரிக்கை

## இது பற்றி ஆராய பாதுகாப்பு சபை அடுத்த வாரம் கூடுகின்றது

(வாஷிங்டன்)

ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கும்படி ஐ.நா சபையை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கேட்டுள்ளார்.

அதேவேளை, ஈராக் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவது பற்றி ஆராய்வதற்காக அடுத்த வாரம் ஐ.நா பாதுகாப்புச் சபை கூடவிருக்கின்றது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கருதப்பட்டதின் காரணமாக அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. என்றாலும் உணவுக்கு எண்ணெய் என்ற அடிப்படையில் ஓரளவுக்கு உணவுப் பொருள்கள் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

அடுத்த வாரம் கூடவிருக்கும் ஐ.நா பாதுகாப்புச்சபை கடந்த 13 ஆண்டுகளாக அமுலில் உள்ள ஈராக் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது பற்றி ஆராயும். தடையை நீக்குவதாயின் அதற்கான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இதற்கிடையில் ஈராக்கின் மறுசீரமைப்புப் பணிகளில் ஐ.நா முக்கிய பங்கு பணியாற்ற வேண்டும் என்று பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனானும் இதே கருத்தையே வெளியிட்டிருக்கிறார்.

சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை வெளிநாடுகளில் இருந்து உணவுப் பொருட்கள் வாங்க ஈராக்கிற்கு ஐ.நா சபை அனுமதி அளித்திருந்தது. போர் தொடங்கும் முன்பு ஐ.நா. சபை அதிகாரிகள் ஈராக்கிலிருந்து வெளியேறியதால் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் பணி நின்றது.

இதனிடையே ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதா என்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பற்றி, ஐ.நா ஆயுத சோதனைக் குழுவின் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் ஏப்ரல் 22ஆம் திகதி ஐ.நா. சபையிடம் தெரிவிக்குமாறு ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கேட்டுக் கொண்டுள்ளது.

ஈராக்கில் ஆயுத சோதனை மேற்கொள்ள இன்னும் அவகாசம் தேவை என்று கேட்டிருந்தார் ஹான்ஸ் பிளிக்ஸ். இதனால் அமெரிக்காவுக்கு இவரைப் பிடிக்கவில்லை. வரும் ஜுன் மாதம் இவர் ஓய்வு பெற இருக்கிறார்.

ஈராக்கிடமுள்ள பேரழிவு ஆயுதங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டதென ஐ.நா சபை சான்றிதழ் அளித்தால் தான் பொருளாதாரத் தடை நீக்கப்படும் என்ற நிபந்தனை இருப்பதனால் அடுத்தவாரம் இடம் பெறவுள்ள விவாதம் சிக்கலானதாகவும் நீண்டதாகவும் இருக்கும் என்று இராச்சியத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

ஐ.நா ஆயுத ஆய்வாளர்கள் மீண்டும் ஈராக்கிற்குள் அனுமதிக்கப்படவேண்டும் என்ற இன்னொரு நிர்ந்தனையும் உள்ளதென கூறப்படுகின்றது.

இதனிடையே நாட்டின் சட்ட ஒழுங்கை நிலை நாட்டிக் கொள்ள ஈராக்கியர்களும், அமெரிக்காவின் தலைமையிலான கூட்டணிப்படைகளும் முயன்று வரும் நிலையில் ஈராக்கின் வடக்கு நகரமான மோசூலில் இடம்பெற்று வரும் வன்முறைகளும் தடையாகவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (பி-2)

# சதாம் வீழ்ந்தாலும் முழுமையான வெற்றி இன்னும் கிட்டவில்லை

## அதிபர் புஷ் கவலை

(வாஷிங்டன்)

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி முடிந்த போதிலும், இன்னும் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் புஷ் கூறினார்.


வாஷிங்டனில் வெள்ளைமாளிகையில் சிறிய வர்த்தகர்களின் கூட்டத்தில் அவர் பேசினார். வெற்றி நிச்சயம் என்றாலும் இன்னும் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. விரக்தி அடைந்த ஆபத்தான ஆட்கள் இன்னும் ஈராக்கில் உள்ளனர்.

ஆபத்திலிருந்து அமெரிக்க மக்களைக் காக்கும் பணியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. ஒரு மாதத்துக்கு முன்னர் ஈராக் மக்களுக்கு அவர்களது நாடு ஒரு சிறைச்சாலை போல் இருந்தது. உலகை அச்சுறுத்தும் பயங்கரவாதிகளின் சொர்க்கமாக அந்த நாடு விளங்கியது. தற்போது உலகம் பாதுகாப்பாக உள்ளது. ஈராக் மக்கள் தங்கள் தலையெழுத்தை மாற்றும் தகுதி பெற்றுவிட்டனர்.

ஈராக்கில் எதிரிகள் சரணடையும் வரையிலும் அல்லது அவர்கள் அழிக்கப்படும் வரையிலும் கூட்டணிப் படை அவர்களை விரட்டிக் கொண்டே இருக்கும்.மத்திய கிழக்கு நாடுகளில் சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்துக்கு ஈராக் ஒரு உதாரணமாகத் திகழும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஈராக்கில் கிடைத்த வெற்றி முக்கியமானதாகும். எனினும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் தொடர்கிறது. பணபலம் கொண்ட எதிரிகளால் அமெரிக்காவுக்கு இன்னும் ஆபத்து உள்ளது.

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் பல நாடுகளுக்கும் பரவுவதால் நாகரிக உலகுக்கு ஆபத்து நீடிக்கிறது. உலக அமைதியை நாம் பாதுகாக்கிறோம் என்றார் அதிபர் புஷ்.(பி)



## ஐரோ.ஒன்றிய கூட்டம் நடைபெறும் வேளையில்

# ஏதென்ஸ் நகரில் மாபெரும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(ஏதென்ஸ்)

ஐரோப்பிய ஒன்றியக் கூட்டம் இடம்பெறும் ஏதென்ஸ் நகரில் மாபெரும் போர் எதிர்ப்புப் போராட்டம் இடம் பெற்றுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அதனைக் கட்டுப்படுத்த முயன்ற பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பிரிட்டிஷ் ஏயர் வெஸ் கட்டடத்தை சற்று நேரம் ஆக்கிரமித்திருந்ததாகவும் அந்தக் கட்டடத்தின் மீது போர் எதிர்ப்பு பதாதைகளை வைத்திருந்ததாகவும் செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன.

இதேபோல் 10 நாடுகளை புதிதாக இணைப்பது தொடர்பாக ஏதென்ஸில் கூட்டப் பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத்தில் ஈராக் பிரச்சினை குறித்தும் விவாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஈராக் போரின் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியம் ஆழமாகப் பிளவுபட்டுள்ள நிலை குறித்தும் இக் கூட்டத்தில் பேசப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ஈராக்கை கட்டியெழுப்புவதில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒத்துழைக்காவிட்டால் மீண்டும் ஐக்கிய நாடுகள் சபையை ஓரம் கட்ட வேண்டி ஏற்படும் என்று பிரித்தானிய வெளியுறவுத்துறை செயலாளர் ஜெக்ஷெரோ அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார். (பி-2)

இந்தியாவில் லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் லொறிகள் மற்றும் வாகனங்கள்.



# ஜனநாயக, மத சார்பற்ற கூட்டாட்சி; ஈராக்கிய எதிர்க் கட்சிகள் விருப்பம்

(உர்ஈராக்)

சதாம் ஹுசைன் ஆட்சி நீக்கப்பட்ட பிறகு ஈராக்கின் தலைவர்கள் யாரும் வெளியிலிருந்து திணிக்கப்படக் கூடாது என்று அமெரிக்கா ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஈராக் எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற அக்கூட்டம் புராதனமான உர் என்ற நகரில் கடந்த செவ்வாயன்று நடைபெற்றது.

அதில் 13 அம்சத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளில் சில வருமாறு:

* ஈராக்கில் ஜனநாயக ஆட்சியே நடைபெறவேண்டும்.
* மத அடிப்படையிலான ஆட்சி அமையக் கூடாது,
* ஈராக்கியரே தங்களது நாட்டுத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.
* அமைய உள்ள அரசு, ஜனநாயக கூட்டாட்சி அடிப்படையிலான ஆட்சியாகவே இருக்க வேண்டும். ஆனால் அது நாட்டு மக்களின் இசைவைப் பெற்றதாக அமைய வேண்டும். நாட்டின் சட்ட விதியே எல்லாவற்றிலும் உயர்ந்தது எனக் கருதப்பட வேண்டும்.
* அரசியல் வன்முறை முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். உள்ளூர் அளவிலும் தேசிய அளவிலும் மறு சீரமைப்புக்கான பணியை ஈராக்கியரே உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
* நாட்டின் பாதுகாப்பு, அடிப்படை சேவைகள் அளிப்பதில் ஈராக்கியரும் கூட்டுப்படைகளும் இணைந்து பங்கேற்க வேண்டும்.
* சதாம் ஹுசைனின் பாத் கட்சி கலைக்கப்படவேண்டும். அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.
* தேசிய அரசியல் கட்சிகளை ஈடுபடுத்துவது குறித்து விவாதிக்கப்பட வேண்டும்.
* ஆட்சி வீழ்ச்சி அடைந்ததும் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களையும், ஆவணங்கள் அழிக்கப்பட்டதையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டித்தது.
* அரசிலும் ஈராக் சமூகத்திலும் மதத்தின் பங்கு குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ஈராக்கைச் சீரமைப்பது தொடர்பாக நாட்டின் பல்வேறு குழுக்களுடன் அமெரிக்காவும் பிரிட்டனும் செவ்வாயன்று விவாதிக்கத் தொடங்கின.

ஈராக் குழுக்கள் தங்களிடையில் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து நாட்டில் ஜனநாயகம் மலர்வதற்குப் பாடுபடும்படி வலியுறுத்தப்பட்டது. (பி)

உலக தரிசனம்

# நக்கீரன் கோபால் மீது 'பொடா' சட்டத்தின் கீழ் வழக்கு

(புதுடில்லி)

நக்கீரன் இதழாசிரியர் கோபால் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பிரிக்க முற்பட்டமை, வீரப்பனுக்கு ஆயுதங்கள் கடத்தியமை போன்ற பல குற்றச் சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட கோபால் தொடர்ந்தும் விளக்கமறியலிலேயே வைக்கப்பட்டுள்ளார்.

ஆயதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவரது வழக்குகளை பொடா சட்டத்துக்கு மாற்றுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டதற்கு அமைவாகத் தமிழக பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே நக்கீரன் கோபால் மீது பொடா சட்டம் பயன்படுத்தப்பட்டதற்கு எதிராக போராட்டம் நடத்தப் போவதாக தி.மு.க தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், பொடா சட்டத்தை மளப் பெறுமாறு மத்திய அரசை வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**வாஜ்பாய்க்கு வைகோ கடிதம**

கோபால் கைது செய்யப்பட்டது தொடர்பான இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறும் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ பிரதமர் வாஜ்பாயிற்கும், துணைப்பிரதமர் எல்.கே. அத்வானிக்கும் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தீவிரவாதிகளை ஒழிப்பதற்கென மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட பொடா சட்டத்தின் கீழ், தமிழகத்தில் தமிழ் புனர்வாழ்விகள் உட்பட இதுவரை 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (பி-2)

# இந்தியாவில் லொறி உரிமையாளர் நடத்தும் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் நடைபெற்றுவரும் லொறி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நிபந்தனையற்ற பேச்சு நடத்த மத்திய அரசு அகில இந்திய மோட்டார் போக்குவரத்துச் சங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்த பேச்சுக்கள் நேற்று நடைபெறுவதாக இருந்தன.

இந்தியா முழுவதுமான லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் நேற்று நான்காவது நாளாகவும் நீடித்தது.

இதன் காரணமாக நாடு முழுவதும் பொருட்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலைகளும் அதிகரிக்கும் நிலை தோன்றியுள்ளது. லொறிகள் மூலம் காய்கறிகள் மற்றும் பழங்கள் கொண்டு வரப்படுவதால் இவற்றின் விலைகள் பெருமளவில் உயர்ந்துள்ளன. (பி-2)

# நெருக்கீட்டின் பின்.....

முறிந்தவீடு
இல.8, இறுகிய தெரு,
யாழ்ப்பாணம்.
18.04.2003

அன்புள்ள சாந்தி.....

உங்களுக்கு எத்தன வயதிருக்கும். நீங்கள் ஆணா? பெண்ணா? ஒனறும் தெரியாத படியால் சாந்தி அக்கா எனறு விழிப்பதா, அம்மாவா, பாட்டியா, அன்ரியா..... அல்லது மாமாவா... அதுதான் அந்த டொற், டொற், டொற்...!

சரி, நீங்கள் நிர்மலாவுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்த நேரம் முதல், என் சிந்தனை மயிர்கள் ஒவ்வொன்றும் சிலும்ப ஆரம்பித்தன. சிந்தித்தேன், சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சிந்திப்பேன். என் சிந்தனைத் தேன்சிந்திப்பின் அதுவே தேன் சிந்தனை ஆயிற்று.

நான்பிறந்தது 1985 இல்... யாழ்ப்பாணத்தில்! எனக்கு ஒரு வயது ஆகமுதலே இலங்கை ராணுவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் ஆக்ரோஷ நடவடிக்கை செய்தது. நான் இரண்டு வயதில் மழலை பேசத் தொடங்கிய போதில் இந்திய அமைதி காக்கும் படை இங்கு வந்திறங்கியது. இன்று எனக்குப பதினெட்டு வயது... கட்டிளமைப் பருவம. வாழ்வின் வசந்த காலம்... ஆனால் அது அப்படியில்லையே! நீங்கள் என்னை ஒரு போதும் திரும்பிப் பார்க்கவில்லையே!!

பளிச்சென்று வெயில் விழுந்தும போர்த்துக் கொண்டு தூங்கும தூஙகு மூஞ்சியான தெருக்களைத தானே என் வாழ்வின் பெரும்பாலான காலத்தில் நான் கண்டேன்.

குமிழைத் திருகிவிட்டால், கொலை பற்றியும், கொள்ளை பற்றியும், பாலியல் வன்முறை பற்றியும், கொடும் யுத்தம்பற்றியும் கறுப்புக் குரலில் கத்தித் தீர்க்கும் வானொலிப் பெட்டியைத்தானே நான்கேட்டேன்!

நிமிர முடியாமல் நிலவே நெளியும் இரவுகளில் துப்பாக்கிகள் முழங்கும் ஓசையும் ஷெல்கள வெடிக்கும் அலறலும் விமானங்கள் பொழியும் குண்டுகளின் இரைச்சலுந்தானே எனக்குத் தாலாட்டாயிற்று?

நீங்கள் என்னிடம் வர நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்பதற்காகத்தான் இதை எழுதுகிறேன்.

1988ம் ஆண்டில் ஒரு அதிகாலைப் பொழுது! எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்த ஞான வைரவர் கோயில் மணி ஐந்து மணிக்கு வழமைபோல அடித்தது. எனக்கு அரை நித்திரையிலும் கேட்டது தான். கதிரவன் எங்கேயோ கட்டுண்டு கிடக்கிறான். வெளிச்சம் இன்னும் வெளியே வரவில்லை.

திடீரென்று ஒரு வாகனம் விரைந்து வந்து எங்கள் புதிய வீட்டின் முன் நின்ற சத்தம். அம்மா கதவு திறந்த சத்தம்... பிறகு அம்மா “போகாதேங்கோ போகாதேங்கோ” என்று குழறிய சத்தம். அப்பா “ஐயோ என்ரை ஐயோ” என்று கத்திய சத்தம். நான் எழுந்து ஓடி வந்து பார்த்தேன். அப்பாவை இழுத்து அந்த வாகனத்தில் ஏற்றியதையும் அவருக்குப்பலமாக அடித்ததையும் பார்த்தேன். அவ்வளவுதான்... அப்பா பிறகு வரவில்லை.

அப்போது மூன்று வயதுக் குழந்தையாக இருந்த உனக்கு



விடயங்கள் எப்படி இவ்வளவு தெளிவாக ஞாபகம் இருக்கும் என்று கேட்கிறீர்களா? அன்று முதல் இன்று வரை இந்தக் கதை எத்தனை முறை சொல்லப்பட்டு விட்டதை நான் கேட்டிருப்பேன்? எனக்கு எல்லாமே பாடம். அல்லது என் மூளையில் இதை விட வேறு ஒன்றும் இல்லை. என் கண்களில் கவிந்து கிடக்கும் வெறுப்பார்வை இன்னும் அந்தவாகனம் போன வழியையே பார்க்கிறது.

காணாமல் போனோர் பட்டியலில மிக மூத்த உறுப்பினர் என் அப்பா தான. அந்த நாளுக்குப் பிறகு இருட்டும் புழுக்கமுமே எங்கள் வீட்டுக்குத் துணை. அப்பம்மா கேட்ட சாத்திரங்கள் எல்லாம் “அப்பா உயிருடன் இருக்கிறார்” என்று சொன்னபடியால், வீட்டில் அம்மா அழவும் உரிமை இருக்கவில்லை. எனக்கோ “அப்பா எங்கே?” என்பது நீண்ட வருடங்களாகக் குழப்பமாகவே இருந்தது.

இரவுநேரத்தில் யன்னல் வழி உள்வழியும் காற்றுக் கத்திக் கத்தியே என் கனவுகளைக் குலைக்கும். கனவுகளில் அடிக்கடி சிவப்புக் கம்பளியால் போர்த்தப்பட்ட அப்பாவின் உருவம் அழுதபடி வரும். அந்தப் பயங்கரத்தைத் தாங்க முடியாமல் நான் எழுந்து அழுவேன். இன்னொரு கனவில் சிவப்பு நீளச் சொண்டுடன் ஒரு கறுப்புக் குருவி வரும். அது கொத்து கொத்தெனக் கொத்தியே என் மார்புச் சுவர் பிளந்து விடும் போன்ற வலி. அம்மா வேறு “அல்சர்” நோயாளியாகிவிட்டா.

முற்றுப் புள்ளியை ஏற்றுக் கொள்ளாத அப்பம்மாவும் சாத்திரம கேட்டுக் கேட்டே போய்ச் சேர்ந் திட்டா.

இன்னும் கூட எங்காவது வாகனச் சத்தம் கேட்டால் என் இதயம் படபடவென அடித்துக் கொள்ளும். மனதிற்குள் பெரும் அந்தரமாய் ஒரு உணர்வு வரும். நான் ஓடிப்போய் சாமி அறையில் இருந்து விடுவேன்.

இப்போது சாமி அறையில் நான் அதிக நேரம் செலவிடு கிறேனாம் என்று அம்மா சொல்கிறா. சுவாமிக்குப் போடும் பூவைத் திருப்பித் திருப்பிப் போட்டுக் கொண்டிருப்பது எனக்கு ஒரு ஆறுதலைத் தருகிறது.

நான் பாடசாலையில் திறமையாகப் படிக்கவில்லையாம் என்பது வேறு அம்மாவுக்குக கவலை. ஓ.எல் பெறுபேறு வந்த போது, அம்மாவின் மௌமான பார்வையின் அணைப்பே எனக்கு இம்சையாய் இருந்தது.

கல்லில் வீழ்ந்த பிறகும் உடையாமல் இருப்பதற்கு மனம் கண்ணாடி இல்லாமல் இருந்தால் தானே! எனது மனதின் தாங்கு திறன் அவ்வளவு தான். அம்மாவுக்கு அது புரியவில்லை.

“அப்பாவும் இல்லை. நீ படியாமல் என்ன செய்யப் போறாய்?” என்ற புராணம் தான்.

அப்பா இருந்திருந்தால் நான் படித்திருப்பேனே? இந்த பிறவட்டத்தை எங்கே உடைப்பது? எப்படி உடைப்பது?

சாந்தி... எனக்கு ஒரு உதவி செய்! நினைவு தொடமுடியாத தூரத்திற்கு அந்த நிகழ்ச்சியை அனுப்பி விடமாட்டாயா? பச்சை நிறத்தைக் காணும் போதெல்லாம் எனது மனதின் செதில்கள் விறைத்துப் போகின்றனவே!

வீதியில் வாகனம் வந்தால் இன்றும் கூட நான் ஐம்பதடி தூரம் விலகிப் போய்விடுகிறேனே! என்னைப் பார்க்க உனக்குப் பாிதாபமாக இல்லையா? எப்போது தான் நீ என் வீட்டிற்கு வரப் போகிறாய்?

அம்மாவும் நானும் கௌரவமாகச் சாப்பிட வேண்டும் என்பதற்காக நான் இப்போதெல்லாம் விறகு கட்டப் போகிறேன். கோடாலியைச சைக்கிளில் கட்டினாலும் அதைப் பத்து முறை அவிழ்த்துக் கட்டிக் கொள்கிறேன். ‘பயம்’ என்ற உணர்வு என் மூளையில் சிலந்தி வலை வலையாயித் தொங்குகிறது.

இளங்கனா புஷபிக்க வேண்டிய வயதில் ஓர் இளைஞன் இப்படி இருக்கிறேனே! இது யாருடைய தவறு?

தொண்டையைப் பலமுறை செருமிப்பார்க்கிறேன். என்றாலும் அங்கு அடைபட்டுக் கிடக்கும் சோகம் வெளியே வர மறுக்கிறது. என் வயதை ஒத்த நண்பர்கள் எலலாம் சுவிஸ் என்றும் ஜேர்மனி என்றும் பறந்து விட்டார்கள். இங்கே இருக்கும் ஓரிருவரை நான் பார்த்துச் சிரித்தாலும் அது சோகமுலாம் பூசிய சிரிப்பாகத் தான்இருக்கிறது.

அம்மாவின் இதயத்தில்

**கோகிலா மகேந்திரன்**

கண்ணீருக்கு வேண்டிய மூலப் பொருள் மட்டும் தான் பாக்கி இருக்கின்றன. சாந்தி... நீ எங்களுக்கு உதவல்லை என்றால், தற்கொலை செய்வதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை.

மற்றொரு வேண்டுகோளையும் நான் உன்னிடம் விடுக்க வேண்டும். அப்பாவைத் தூக்கி வாகனத்துள் எறிந்து கொண்டு சென்ற அந்தப் பச்சை உடைக்

## வெள்ளி முற்றம்

காரரிடம் நீ மறந்தும் போகக் கூடாது. பச்சை உடை அணியும் சிவப்பு மனங்களின் எண்ணிக்கை உலகம் முழுவதிலும் அதிகரிப்பதைப பார்த்து நீயும் பயந்து அவர்கள் பக்கம் போய்விடக்கூடாது. மனிதர்களைப் போல எந்தக் கொளகையும் இன்றி நேரத்துக்கு நேரம் மாறும் குணம் உனக்கு இல்லை என்று எனக்குத் தெரியும் என்றாலும் அதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கடிதம் ஆரம்பத்தில் “நீங்கள்” என்ற மரியாதைப் பன்மையுடன் தொடங்கிப் பிறகு என்னை அறயாமலே உரிமையுடன் “நீ” ஆகிவிட்டது. உன்னை நான் உரிமைகொண்டாட முடியும். அந்தத் தகைமை எனக்கிருக்கிறது. ஏனென்றால் நான் இந்தப் பூவுலகில் எந்த மனிதனுக்கும் துன்பம் செய்யவில்லை. எனது அம்மாவோ யாருக்கும் தீமை செய்வது பற்றி மனதிலும் நினைக்கவில்லை. இந்தத் தகைமை போதாதா உன்னை என்னுடன் வருமாறு அழைக்க?

என் மனப்புண்ணை நானே கிளறி அழுது உன்னிடம் சொல்லித தீர்த்ததில் ஒரு ஆறுதல் தெரிகிறது. இதை நீ யாருக்கும் சொல்லமாட்டாய் என்ற நம்பிக்கை மனதில் பால் வார்க்கிறது.

வாழ்வில் எனக்கு மாதிரிப் பாத்திரமாக இருந்திருக்க வேண்டியவர் அப்பா. அப்பா போன பிறகு அம்மாவுக்கும் உறுதியான ஆளுமை இருக்கவில்லை. ஒரு ஆண் பிள்ளை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான முன் வழிகாட்டல் எதுவும் இன்றியே நான் வளர்ந்தேன். என் அழுகை என் நெஞ்சையே குடைந்த, என் அலறல் என்னையே ஆடவைத்த வாழ்வு தானே என் வாழ்வு? அதனால் தானா நீ என்னிடம் வரத்தயங்குகிறாய்?

என் வயதுக்கும் நான் பார்க்கும் தொழிலுக்கும் மீறிய ஒரு முதிர்ச்சியை இக்கடிதத்தில் பார்கிறாய் அல்லவா? எமது குடும்பத்தில் எல்லாம் சரியாக இருந்திருந்தால் நான் எப்படி இருந்திருக்க வேண்டிய ஆள் என்பதை அதிலிருந்து நீ ஊகித்துக் கொள்வாய்.

என்னைச் சுற்றியும் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பை ஒருவாறு தணித்து என்னிடம் நீ வந்து விடு சாந்தி.

அரச அலுவலகத்திற்கு உணமையாகப் போகிறவர்களிடம தான் நீ போவாயா? உத்தியோகத்திற்குக் காகித வீதிகளில் கனவோடு செல்லும் என்னைப் போன்றவர்கள் உனக்கு இரண்டாம் பட்சமா? இல்லைத்தானே!

விழி நீர் தெளித்து ஒரு கோலம் போட்டு உன்னை வரவேற்கக் காத்திருப்பேன். எங்கள் வீட்டுப் படலையின் நிறம் கறுப்பு- சந்திப்போமா?

அன்புடன்
தாசன்

---

# முன்பள்ளிச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முன்பள்ளிச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், வேதனம் கிடைக்காத ஆசிரியர்களுக்கான வேதனம் என்பன தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், புதிய முன்பள்ளிகள் அமைத்தல், புதிய ஆசிரியர்கள் நியமித்தல் என்பன முன்பள்ளி செயற்றிட்டக் கல்வியில் ஒன்றிணைவுத் தன்மையிலிருந்து விலகிச் செல்கின்ற நிலையினால் தேவையான பகுதிகளில் புதிய முன்பள்ளிகள் தேவைப்படும் போது முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு அனுமதியுடன் அமைத்து கல்விச் செயற்பாட்டிற்கு ஒத்துழைக்கும் வண்ணம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் கேட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் கொத்தணி, பிரதேசம் மட்டம், வலய மட்டத்தில் முன்பள்ளி பெற்றார், ஆசிரியர்கள் இணைந்து முன்பள்ளிச் செயற்பாட்டுக் குழுக்களை அமைத்து அவற்றின் மூலம் மாவட்ட மட்ட செயற்பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், கலைத்திட்டங்கள் என்பன எதிர்கால கல்வித் தேவைக்கேற்ற வகையில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலர் பிரிவுக்களுக்கு முன்பள்ளி செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்ய ஒவ்வொரு இணைப்பாளர் நியமிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றார்.

வலய மட்ட செயற்குழுவிற்கு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தலைவராக இருந்து செயற்பட்டு வருகின்றனர்.

இச் செயற்றிட்டத்திற்கு மாவட்டத்தில் துறைசார்ந்தவர்களும் சர்வதேச, ஊள்ஊர் நிறுவனங்களும் பொது அமைப்புக்களும் எமக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கி முன்பள்ளி கல்வி செயற்றிட்டத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வண்ணம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் மேலும் கேட்டுள்ளது. (உ)

---

# வடகிழக்கில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நிலைவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு அனுபவம் உள்ள தகுதியான ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கல்வி அமைச்சர் கருணாசேனகொடித்துவக்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து ஆராயும் ஆவணங்கள் சட்டமா அதிபரிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்ததும் மேற்குறிப்பிட்ட ஆயிரம் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் உடனடியாக வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.(உ-10)

---

# அமைச்சர் நிதிஉதவி

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு அந்திக்குளி ஞானவைரவர் ஆலயத்தினை அண்டிய பிரதேசத்தை சேர்ந்த சுமார் 30 குடும்பங்களின் அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 5ஆயிரம் ரூபாவும் 10 பைக்கற்று சீமெந்தும் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனால் வழங்கப்பட்டுள்ளது. (உ-201)

---

# புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மத்திய வீதி,புனித சூசையப்பர் ஆலய பங்கு மக்களால் சிரம்தானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது. (உ)

---

# இலங்கை அதிபர்களுக்கு இஸ்ரேலில் செயலமர்வு

(கொழும்பு)

இஸ்ரேலில் இம்மாதம் 27ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள அதிபர்களுக்கான செயலமர்வில் 32 இலங்கையர்கள் பங்கேற்கவுள்ளனர்.

பொதுக் கல்வித் திட்டத்தின் கீழ் ஆரம்பப் பாடசாலை அதிபர்களின் வாண்மை விருத்தியை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கான ஆட்களை கல்வி மனிதவள அமைச்சு தெரிவு செய்துள்ளது.

இந்த 32 பேரில் மூவர் மாத்திரமே தமிழா் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ)


# சுபானு வருடம்

### சனி,குரு,ராகு,கேது மாற்றங்கள்

வாக்கிய பஞ்சாங்கப்படி 22.5.2003 இல சனி இடப ராசியில் இருந்து மிதுனத்திற்கு இடம்பெயர்ந்து மிதுனராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சரிக்கும். 23.07 2003 இல வியாழன் கற்கடக ராசியில் இருநது சிங்க ராசிக்கு இடம்பெயர்ந்து ஒரு வருடத்துக்கு சிங்க ராசியில் சஞ்சாரம் செய்யும. 14.08.2003 இல ராகு, கேதுக்கள் இடப விருச்சிக ராசிகளில் இருந்து முறையே மேட ,துலாராசிகளுக்கு மாற்றம் அடைந்து ஒன்றரை வருடம் வரை சஞ்சரிக்கும். இலங்கையில் இக்கிரகங்களின் மாற்றங்களால பொருளாதார, இராணுவ, அரசியல், சமூகமாற்றங்கள் நடை பெறும்.

இம்மாற்றங்கள் பன்னிரு ராசிக்காரர்களுக்கும் ஏற்படுத்தும் பலா பலன்களைப்பார்ப்போம்.

## கடகம்



(புனர்பூசம்,4-ஆம பாதம் முதல், பூசம் ஆயிலியம் (முடிய)

புததாண்டின் ஆரம்பத்தில் சூரியன், ராகு, சுக்கிரன் ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இருப்பதாலும் சனி 12-இல் இருந்தாலும் வக்கிரம் பெற்று உலவுவதாலும் உங்கள் ஆற்றல் வெளிப்படும். அரசு சம்பந்தப்பட்ட பணிகளில் அனுகூலமான போக்கைக் காணலாம்.அயல் நாட்டு தொடர்பு பயன்படும்.நூதனமானவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். கலைத் துறைகளைச் சோந்தவர்கள்,மாதர்கள் ஆகியோருக்கெல்லாம் நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். குரு வக்கிர நிலையில் ஜன்மம ராசியில் உலவுவது சிறப்பாகாது. இதனால் சுபகாரியங்கள் நிகழக்குறுக்கீடுகள் இருந்து வரும். பொருளாதார நிலை சீராக இராது. வீண்செலவுகளைத் தவிர்ப்பது அவசியமாகும். கொடுக்கல்-' வாங்கல் இனங்களில் விழிப்புடன் ஈடுபட்டால் நஷ்டப்படாமல் தப்பலாம். புதிய துறைகளில் பிரவேசிக்கலாகாது.மக்களால் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படும். ஸ்பெகுலேஷன் துறைகளால் அதிகம் ஆதாயத்தைப்பெற இயலாது. சொந்தமாகத் தொழில் செய்பவர்கள், கணிதத்துறையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் தங்கள் கடமையைச சரி வர ஆற்றி வருவது அவசியமாகும்.

ஏப்ரல் 4- ஆம் திகதி முதல் குரு வக்கிர நிவர்த்தி பெறுவது ஓரளவு சிறப்பானது.7-ஆம் திகதி முதல் குரு வக்கிர நிவர்த்தி பெறுவது ஓரளவு சிறப்பானது.7ஆம் திகதி முதல் சனி 12ஆமிடம். மாறுவது விசேஷமானதாகாது. ஏழரைச் சனியின் காலம் இது என்பதால் எதிலும்யோசித்து ஈடுபடுவது அவசியமாகும் விரையச் சனி ,ஜென்ம குரு என்பதால் சில இடர்பாடுகள் ஏற்படவே செய்யும். பக்குவமாகச் சமாளிப்பது நல்லது. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட இனங்களில் விழிப்புத்தேவை. மக்களாலும்,வாழ்க்கைத் துணைவராலும்,வேலையாட்களாலும் பிரச்சினைகள் கூடும்.

ஜூலை 29முதல் குரு 2-ஆமிடம் மாறுவதால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் உண்டாகும். குடும்பத்தில் சலசலப்புக்கள் அகலும். தடைப்பட்டிருந்த சுபகாரியங்கள் நிகழ வாய்ப்பு கூடி வரும். பொருளாதார சிக்கல் விலகும். பணம்,தாராளமாகப் புழங்கும். கொடுக்கல்-வாங்கல் இனங்களில் வளர்ச்சி காணலாம். மக்கள் நலம் சீர்பெறும். மக்களால் அனுகூலமும்உண்டாகும். வாக்கு வன்மை பளிச்சிடும். அரசியல் வாதிகள் மதிப்பு உயரப் பெறுவார்கள். ஆசிரியர்களது நிலைமையில் வளர்ச்சி தெரியவரும் .மருத்துவம், இரசாயனம்,விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான பாதையை காண்பார்கள்.அலுவலகப் பணியாளர்களது. எண்ணம் ஈடேறும். புதிய பதவிகள், பட்டங்கள்ஆகியவை கிடைகக்கும். செய்தொழிலில் விசேஷமான வளர்ச்சியைக் காணலாம். தெய்வானுகூலம் உண்டாகும். தன வந்தர் சகாயம் கிடைக்கும். பிரச்சினைகள் எளிதில் தீரும் காடு,மலை, வனாந்தரங்களில் தொழில் புரிபவர்கள் ஏற்றம் பெறுவார்கள். மற்றையோர் போற்றத்தக்க வகையில் சாதனை பல ஆற்றுவீர்கள். செப்ரெம்பர் 8-ஆம் திகதி முதல் ராகு10-ஆமிடம் மாறுவது அனுகூலமாகும்.கேது 4-ஆமிடம் மாறுவது சிறப்பாகாது. ராகுவால் அந்நிய நாட்டுத்தொடர்பு வலுக்கும். நவீன விஞ்ஞானத்துறைகள் இலாபம் தரும்.தூதுவர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பயணம் சம்பந்தப்பட்ட இனங்கள் ஆக்கம் தரும்.4-இல் உள்ள கேதுவால் அலைச்சல் கூடும். சுகபங்கம் ஏற்படும். தாய் நலம் பாதிக்கும். நண்பர்கள், உற்றார்,உறவினர்களால் தொல்லைகள் சூழும். குரு பலம் இருப்பதால் எதையும்சமாளிப்பீர்கள்.வருடப் பின் பகுதியில் செவ்வாய்,சனி,ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இல்லாததால் எதிலும்பதற்றப் படாமல் நிதானமாக ஈடுபடுவது நல்லது.8-ஆமிடத்தில் உலவும் செவ்வாயைக் குரு பார்ப்பதால் மோசமான நிலை என்று ஏதும் ஏற்பட்டு விடாது. என்றாலும் செவ்வாய், சனி,கேது ஆகியோருக்குத் தொடர்ந்து பிரீதி,பரிகாரங்களைச் செய்து வருவது நல்லது.அதன் மூலம் சங்கடங்கள் என்பவை குறையும். அக்டோபர் 26 முதல சனி வக்கிரநிலை பெறுவதால் ஓரளவு நலம் புரிவார். குரு 10-ஆமிடத்தையும்,10-இல்உள்ள ராகுவையும் பார்ப்பதால் செய்தொழிலில் சீரான வளர்ச்சியைக்காணலாம். புதிய உத்தி முறைகளைக்கையாண்டு, ஆதாயம் கூடப்பெறவும் வாய்ப்பு கனிநது வரும்.நூதனமானவர்களது தொடர்பு பயன்படும்.

### வியாபார வளர்ச்சி

ஏப்ரல் மாதத்தில் செவ்வாயின் சஞ்சாரம் சிறப்பாக இருப்பதாலும் சுக்கிரன் ,புதன்,ராகு ஆகியோரது நிலைஅனுகூலமாக இருப்பதாலும் செயல் திறமை பளிச்சிடும். கவர்ச்சி அமசம் கூடும். எடுத்தகாரியங்களில வெற்றி காணலாம்.வியாபாரத்தில் வளர்ச்சிகாண சந்தர்ப்பம் உருவாகும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும்.நண்பர்கள், உற்றார், உறவினர்களால் நலம்கூடப்பெறலாம். 4-ஆம்திகதி முதல் குரு வக்கிர நிவிர்த்தி பெறுவதால் ஓரளவு நலம் புரிவார்.7-ஆம்திகதி முதல் சனி12-ஆமிடம் மாறுவது சிறப்பாகாது. இதனால் எதிர்பாராத செலவுகள், இழப்புக்கள் ஆகியவை ஏற்படும். காலில் அடிபட நேரலாம். பயணத்தின் போது விழிப்புடன் இருப்பது அவசியமாகும். வாழ்க்கைத்துணைவரால் செலவுகள் கூடும்.மாதப் பின் பகுதியில் சூரியன் 10-ஆமிடம் மாறுவதால் அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்குதென்படும். செவ்வாய் 7-ஆமிடத்தில் உலவினாலும் கூட அவர் உங்கள் ர்ராசிக்கு சுபராவதால் நலம் புரிவார்.சுக்கிர பலத்தால் கலைஞர்கள் பிரகாசிப்பார்கள்.மாதர்களது எண்ணம் நிறைவேறும்.

### முக்கியஸ்தர்களது உதவி

மே மாதத்தில் சூரியன் ,சுக்கிரன் ராகு,ஆகியோரது சஞ்சாரம் சிறபபாக இருப்பதால் அரசாங்கத்தாரால அனுகூலம் உண்டாகும். முக்கிய பணிகள் நிறைவேறும். சாதனைகள பல ஆற்றக்கூடிய சந்தர்ப்பம் கூடி வரும். முக்கியஸ்தர்கள் உங்களுக்கு உதவுவார்கள். கலைஞானம் கூடும். பெண்களுக்கு மன மகிழ்ச்சி உண்டாகும். புதியஆடை,அணிமணிகள் சேரும். தெய்வப் பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு அதிக்ரிக்கும். பொன்,வெள்ளி ,ஆடை,அணிமணிகள் ஆகியவற்றின் சேர்க்கையும் நிகழும். மன மகிழ்ச்சி கூடும். நண்பர்கள் ,உற்றார்,உறவினர்கள் ஆகியோர் உதவி புரிவார்கள். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். கணவன் -மனைவி உறவு நிலை திருப்தி தரும். கூட்டுத்தொழிலில் வளர்ச்சி காணலாம். சனிப் பிரீதியைத் தொடர்ந்து செய்து வருவது நல்லது.தந்தையால் நலம் உண்டாகும்.தந்தையார் ஜிதச்சொத்துக்கள் சேரும. பண நடமாட்டம் அதிகரிக்கும். வீண்செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

### ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம்

ஜூன் மாதத்தில் உங்கள் ராசிக்கு 11- ஆமிடத்தில் கிரகங்கள் ஒன்று கூடுகிற நிலை அமைவதால் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் வந்து சேரும். அரசாங்கத்தாரால் நலம் பெறலாம். நிர்வாக ஆற்றல் கூடும்.எலக்ரானிக், கம்பியூட்டர் போன்ற நவீனவிஞ்ஞானத் துறைகள் இலாபம் தரும்.5-ஆம் திகதி முதல் கலைத்துறைகளைச் சேர்நதவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். நிலபுலங்கள் ஆதாயம் கிடைத்து வரும்.செவ்வாய்8-லும் ,சனி 12-லும்,குரு ஜன்ம ராசியிலும் உலவுவதால் சில இடர்பாடுகளும் அவ்வப்போது ஏற்படும். உடன் பிறந்தவர்களாலும்,வேலையாட்களாலும் ,மக்களாலும், பிரச்சினைகளுக்கு ஆட்பட நேரலாம். வீண் வம்பு,வழக்குகளில் ஈடுபடலாகாது. விளையாட்டு வினோதங்களில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிறு விபத்துக்கு ஆளாகநேரலாம். எதிர் பாராத

# புத்தாண்டுப்பலன்

செலவுகள்,இழப்புக்கள் ஆகியவை ஏற்படும்.கைப்பொருளை பத்திரப் படுத்தி வைத்துக் கொள்வது நல்லது.

### சோதனையான மாதம்

ஜூலை மாதத்தில் கோசாரப்படி கிரகங்களின் சஞ்சாரம் சிறப்பாக இல்லாததால் அலைச்சல்,மன அமைதக்குறைவு,உடல் நலக்குறைவு, சங்கடம்,வீண்செலவு, மற்றையோரால் ஏமாற்றப்படுதல்,விரும்பத்தகாத இடமாற்றம்,நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும். சோதனையான மாதம் இது என்பதால் எதிலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து ஈடுபடுவது நல்லது. வீண் விவகாரங்களில் பிரவேசிக்கலாகாது. உடலில் காயப்பட நேரலாம். இயந்திரங்கள், எரிபொருட்கள், மின்சாரம்,கூரிய ஆயுதங்கள், வெடி பொருட்கள் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும் போதுஎச்சரிக்கை தேவை. விபத்துக்குக்காரண்ம் உண்டு. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். செலவுகளைச் சமாளிக்க கடன்படவும்நேரும்.கலைஞர்கள், மாதர்கள்ஆகியோருக்கெல்லாம் மாமூலாக வளர்ச்சி பாதிக்கப்படாது. வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகளால்பயன் உண்டாகும்.ஜனன கால யாதகம் வலுத்திருப்பவர்களுக்கு சோதனைகள் குறையும்.இறை வழிபாட்டிலும்,கிரகவழிபாட்டிலும் ஈடுபடுவதன் மூலம் அமைதி காணலாம்.29-ஆம்திகதி முதல்குரு 2ஆமிடம் மாறுவது விசேடமானதாகும்.

### பொருளாதார நிலையில் வளர்ச்சி

ஆகஸ்ட் மாதத்தில் புதன் ,குரு சுக்கிரன் ஆகிய சுபக்கிரகங்கள் வலுத்திருப்பதாலும்,ராகு 11-ல் உலவுவதாலும் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். புத்திசாலித்தனம் பளிச்சிடும். பொருள் திரட்டுவதில் ஆர்வம் கூடும். கொடுக்கல் -வாங்கல் இனங்கள் இலாபம் தரும்.ஸ்பெகுலேஷன் துறைகள் ஆதாயம கொண்டு வரும்.பொருளாதார நிலையில் விசேஷமான வளர்ச்சியைக்காணலாம். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் வருவாய் வநது சேரும். குடும்ப நலம்,மக்கள் நலம்,வாழ்க்கைத்துணை நலம் ஆகியவை சீர்பெறும். நல்லவர்கள் உங்களுக்கு உதவிபுரியமுன்வருவார்கள். தெய்வ தரிசனம்,சாதுதரிசனம் ஆகியவை கிட்டும்.மாதப்பின் பகுதியில் சுபகாரியங்கள் கைகூடும். அரசியல், நிர்வாகம்,மருத்துவம், இரசாயனம்,விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபீட்சம் காண்பார்கள். வியாபாரிகளுக்கு இலாபம் கூடும். கணிதத் துறை ஊக்கம் தரும்செவ்வாய் ,சனி ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இல்லாததால் சிறு சிறு இடர்பாடுகளும் உண்டாகும்.குரு பலத்தால் சமாளிப்பீர்கள்.

### அதிர்ஷ்ட வாய்ப்புக்கள்

செப்ரெம்பர் மாதத்தில் உள்ள ராசிக்கு 2-ஆமிடத்தில் தனகாரகன்,தன ஸ்தானாதிபதி,லாபாதிபதி ஆகியோர் ஒன்று கூடி உலவும் நிலை அமைவதால் பொருளாதார சுபீடசம் உண்டாகும். றேஸ்,லாட்ரரி, பங்கு மார்க்கெட் போன்ற அதிர்ஷ்ட இனங்கள் இலாபம் தரும்.மற்றையோரது பணம் உங்களுக்கு வந்து சேரும.செல்வாக்கும்,மதிப்பும்உயரும்.8-ஆம் திகதி முதல் ராகு 10-ஆமிடம் மாறி,குருவின் பார்வையை பெறுவதால் செய்தொழில் சிறக்கும். கேது 4-ஆமிடம் மாறுவதாலும், செவ்வாய் 8-இல் உலவுவதாலும் சனி 12-ஆமிடத்தில் சஞ்சரிப்பதாலும் உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது.எக்காரியத்திலும் பதற்றப்படாமல் நிதானமாக ஈடுபடுவதன் மூலம் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம்.வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடலாகாது.உடன் பிறந்தவர்களாலும்,வேலையாட்களாலும், தாயாராலும்,தாய்வழி உறவினர்களாலும் சிறு சிறு பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படும்.

### கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள்

அக்டோபர் மாதத்தில் குரு பலத்தால் பொருளாதாரநிலை சீராக இருந்து வரும். குடும்பத்திலும் மகிழ்ச்சிகூடும். பேச்சு வன்மை பளிச்சிடும். கொடுக்கல்- வாங்கல் இனங்கள் இலாபம் தரும். மாத முற்பகுதியில் அரசாங்கத்தாரால் அனுகூலம் உண்டாகும். வியாபாரிகள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக்காண்பார்கள்.கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்து வரும். மாதத்தின் பின்பகுதியில் மாணவர்கள் சுபட்சம் காண்பார்கள்.கணிதம்,எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையை காண்பார்கள். 26-ஆம் திகதி முதல் சனி வக்கிரம் பெறுவதால் சங்கடங்கள் என்பவை குறையும்.4-இல்கேதுவும்,8-இல் செவ்வாயும் இருப்பதால் எதிலும் அவசரப்படாமல் நிதானமாக ஈடுபடுவது நல்லது.வீண் அலைச்சல் கூடாது. உஷ்ணாதிக்கத்தைக் குறைத்துக் கொள்வது அவசியமாகும்.

### மாணவர்களுக்குவெற்றி

நவம்பர் மாதத்தில் குரு ,புதன் ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இருப்பதாலும்,சுக்கிர பலம் கூடி இருப்பதாலும ராகு10- இல் உலவுவதாலும் அறிவாற்றல் பளிச்சிடும்.

**ஜோதிட பூஷணம் வித்வான் வே. லட்சுமணன்**

குடும்பத்தில் குதூகலம் கூடும். கேளிக்கை,உல்லாசங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள்.வியாபாரிகளுக்கு இலாபம்கூடும். கலைஞர்கள் வரவேற்பு கூடப்பெறுவார்கள். மாதர்களது எண்ணம் ஈடேறும். அயல் நாட்டு தொடர்பு ஆக்கம் தரும். மாதத்தின் பின் பகுதியில் அதிர்ஷ்ட இனங்களால் ஆதாயம் பெறலாம். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். தெய்வப்பணிகள் நிறைவேறும் எதிர்ப்புகள் என்பவை தென்படுமெனறாலும் அவற்றைச் சமாளிக்கக்கூடிய ஆற்றலும் உண்டாகும். தனவந்தர் சகாயம் கிட்டும்.தான, தருமப் பணிகளில் ஈடுபட சந்தர்ப்பம் கூடிவரும்.

### சொந்தத் தொழிலில் முன்னேற்றம்

டிசம்பர் மாதத்தில் குரு,புதன், ராகு, ஆகியோரது அனுகூலமான சஞ்சாரத்தால் தொடர்ந்து நன்மைகள் ஏற்படும்.பண நடமாட்டம் திருப்தி தரும். மனதில் தெளிவு பிறக்கும். எண்ணங்கள் இனிது நிறைவேறும். சொந்தத் தொழிலில் முன்னேற்றம்காணலாம். அயல் நாட்டுத்தொடர்பு பயன்படும். சுக்கிர பலம் சீராக இல்லாததால் வாழ்க்கை துணை நலனில் கவனம் தேவைப் படும்.கூட்டுத்தொழிலில் அக்கறை தேவை . 5-ஆம் திகதி முதல் செவ்வாய் 9-ஆமிடம் மாறுவதால் அளவோடுநலம்புரிவார். தெய்வப்பணிகளிலும்,தருமப்பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். மாதப்பின் பகுதியில் அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கை காணலாம். எலக்ரானிக்,கம்பியூட்டர்,இனங்கள் இலாபம் தரும். எதிரிகள் அடங்கிப் போவார்கள்.நிர்வாக ஆற்றல் கூடும். ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும்.

### நலம் கூடப்பெற சில வழி முறைகள்

இநதப் புத்தாண்டின் முன்பகுதி காலம் சாதாரணமாகவே, காணப் படும்.

ஜன்ம குரு,விரயச்சனி என்பதால் குருவுக்கும் சனிக்கும் பிரீதி, பரிகாரங்களை அவசியம் செய்து வருவது நல்லது. அதன் மூலம் சங்கடங்கள் என்பவை குறைய வழி பிறக்கும்.

இந்த ஆண்டு முழுவதும் கேதுவின் சஞ்சாரமும் சிறப்பாக இல்லாததால் கேதுப்பிரீதி செய்வதும் நல்லது. தட்சணாமூர்த்தி, ஆஞ்சநேயர்,விநாயகர் ஆகியோரை உள்ளன்போடும்,முழு நம்பிக்கையோடும் வழிபட்டு வந்தால் சோதனைகளை கடந்து ஓரளவு நலம் பெறலாம்.

வருடப்பின் பகுதியில் செவ்வாயின் சஞ்சாரம் பெரும் பகுதிக் காலம் 8-இல் நிகழ்வதால் சங்கடங்களைச் சந்திக்க வேண்டி வரும். என்றாலும் ஜூலை 29 முதல் குருவின் பார்வை செவ்வாய்க்கு அமைவதால் அவரால் விளையக்கூடிய கெடு பலன்கள் குறையும். என்றாலும் செவ்வாய்க்கும் பிரீதி செய்து வருவது நல்லது. வருடப் பின் பகுதி குரு பலத்தால் சிறப்பாக அமையும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

சந்திரனின் ராசியில் பிறந்த உங்களுக்கு இயற்கையிலேயே மதி வளம் உண்டு. சந்திரனின் அதிதேவதை கௌரி ஆவாள். திங்கட்கிழமைகளிலும் பௌர்ணமியிலும் சக்தி வழிபாடு செய்வதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் சுபீட்சம் கூடும்.

ஜனன கால ஜாதகப்படி இந்தப் புத்தாண்டின் முற்பகுதியில் அனுகூலமான தசா, புத்திகள் நடைபெறுமாயின் சங்கடங்கள் என்பவை விலகும். ஆண்டின் பின் பகுதியில் தசா,புக்தி அந்தரங்கள் சாதகமாக அமைந்தால் சுப நலன்கள் இரட்டிப்பாகும். மொத்தத்தில் இந்தப்புத்தாண்டின் பின்பகுதிக்காலம் விசேஷமானதாக அமையும் எனச் சொல்லலாம். (தொடரும்)

## க.பொ.த.(உ/த) பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாடு பூராகவும் எதிர் வரும் 21ஆம திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் சகலரும் பரீட்சைக்கு வரும்போது தேசிய அடையாள அட்டை,அல்லது தபால் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் அஞ்சல் அடையாள அட்டையைத் தவறாது கொண்டு வருமாறும்,இது இயலாத பட்சத்தில் உத்தியோகத்தரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட கடவுச்சீட்டின் அளவிலான புகைப்படத்தை கொணடு வருமாறும் பரீட்சை ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும்,இம்முறை பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் விடைகளை 12 பக்கங்களைக் கொண்ட புதகம் ஒன்றிலேயே எழுத வேண்டும் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்குஅண்ணா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் 2ஆவது சுற்றில் இன்று பி.ப.4.45 மணிக்கு கைதடி வளர்மதி,விளையாட்டுக்கழகமும், உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் விளையாடவுள்ளன. (உ-10)

## தெணியானுக்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

சிறுகதை எழுத்தாளர் தெணியானின் மணிவிழா நிகழ்வுகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரி கலையரங்கில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)தலைமையில் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாளான நாளைய நிகழவுகள் பிப 3.00மணிக்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தல் டாக்டர் க.வேலுமமயிலும் தலைமையிஇ்டம்பெறவுள்ளன. (உ)



ஈராக் மீது வெற்றிகரமாக தாக்குதல் நடத்திய அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் பணிப்பாளர் ஜெனரல் ரொமி பிராங்ஸ் பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது.



பக்தாத்திலுள்ள சதாம் ஹு சைன் மாளிகையைப் பார்த்த ஜெனரல் ரொமி பிராங்ஸ் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது.



சதாமுக்கு எதிரான அமெரிக்கப் படை வீரர் ஒருவர் சதாமின் உருவப்படத்தை எடுத்துச் செல்லும் காட்சி.

# காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சு மூலம்தான் தீர்வு

## அமெரிக்காவின் நம்பிக்கை

(வாஷிங்டன்)

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுத்தான் சரியான தீர்வு என்று நாங்கள் கருதுகிறோம். மற்றப்படி பலாத்காரம் செய்வது இதற்கு உகந்த தீர்வாக இருக்கும் என்று கருதவில்லை என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக நீடிக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவது போல் தெரியவில்லை. காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பது இந்திய தரப்பில் கூறப்படும் வாதம். ஆனால் இதை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. குறிப்பாக இப்போதைய அதிபர் முஷாரப் இதனை எற்றுக் கொள்ள மறுப்பதோடு காஷ்மீருக்குள் பயங்கரவாதிகளையும் ஊடுருவச் செய்து வருகிறார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தும் வரை பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த வாய்ப்பே இல்லை என்பதை பிரதமர் வாஜ்பாயும், மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸும் பல தடவைகள் கூறிவிட்டார்கள்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் வாஷிங்டனில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைதான் சரியான தீர்வு என்றார். பலாத்காரப்படுத்தி உகந்த தீர்வை இதற்கு எட்ட முடியும் என்று நாங்கள் கருதவில்லை என்றும் பவல் சொன்னார்.

காஷ்மீர் பிரச்சினையை 50 ஆண்டுகளாக தீர்க்க முடியவில்லை. தோல்வி தான் இதன் வரலாறு. அப்படியிருக்க பேச்சை தொடர்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? என்று ஒரு நிருபர் கேட்ட போது, 'இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை பன்னெடுங்காலமாக கடினமாகவே இருந்திருக்கிறது' என்பதை கொலின் பவல் ஒப்புக் கொண்டார்.

இருந்தாலும் இது போன்ற பிரச்சினையை தீர்ப்பதற்கு பேச்சுத்தான் உகந்த வழியே தவிர பலாத்காரப்படுத்தியோ, நிர்ப்பந்தம் செய்தோ உகந்த தீர்வை எட்ட முடியாது என்றும் கொலின் பவல் அடித்துக் கூறினார்.அத்துடன் தீவிரவாதம் பற்றியும் அவர் கருத்துக் கூறினார்.

பயங்கரவாதம் என்பது பயங்கரவாதம் தான். இது மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஒரு சாபம். உலகம் முழுவதும் உள்ள நாடுகளை இது பாதிக்கிறது என்று குறிப்பிட்ட கொலின் பவல், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்க சாத்தியம் இருக்கிறதா? என்பது பற்றி ஆராயப் போவதாகவும் தெரிவித்தார். (பி)



போரில் ஈடுபட்ட யு.எஸ் வீரர்கள் தமது கூட்டுப்படைகளுடன்.



வீழ்த்தப்பட்ட ஈராக்கியத் தலைவரின் சிலையொன்று ஒருபகுதி அழிக்கப்பட்ட நிலையில்.



வீழ்த்தப்பட்ட சகவீரரின் அடக்க ஆராதனையின் போது சலூட் செய்து வணக்கம் செலுத்தும் யு.எஸ் வீரர்.

## ஏவுகணை வீச்சில்

# குடும்பத்தை மட்டுமல்ல இரு கைகளையும் இழந்த சிறுவன்

(குவைத்சிட்டி)

அமெரிக்கப் படையின் ஏவுகணை வீச்சில் இரு கைகளையும் இழந்த ஈராக்கைச் சேர்ந்த அலி இஸ்மாயில் அப்பாஸ்(12) சிகிச்சைக்காக குவைத்திலுள்ள மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை சேர்க்கப்பட்டார்.

ஈராக் மீதான போரின் போது அமெரிக்கப் படைகள் வீசிய ஏவுகணை பக்தாத்தில் அப்பாஸ் வசித்த வீட்டின் மீது விழுந்ததில் அவரது குடும்பத்தார் அனைவரும் பலியானார்கள். அப்பாஸ் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய போதும் கைகள் இரண்டையும் இழந்து விட்டார்.

பக்தாத்தில் இருந்து நசிரியாவுக்கு ஹெலிகொப்ரர் மூலமும் பின்னர் அங்கிருந்து விமானம் மூலமும் அமெரிக்க இராணுவம் அப்பாஸை குவைத்துக்கு அழைத்து வந்துள்ளது. காயமடைந்த மேலும் சில ஈராக் சிறுவர்களும் சிகிச்சைக்காக குவைத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தீக்காயங்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கும் அல்பாப்டைன் மருத்துவமனையில் அப்பாஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு அப்பாஸ் பரிசோதிக்கப் படுவார். அவருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெறக்கூடும் என்று பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர் இமத் நஜதா தெரிவித்தார்.

ஈராக் சிறுவன் அப்பாஸ் உடல் நலம் சீராக உள்ளது. அவருக்கு சிகிச்சை தேவைப்படும் வரை அவர் குவைத்தில் இருப்பார். செயற்கைக் கைகள் அவருக்குப் பொருத்தப் படக் கூடும் என்று சுகாதார அமைச்சக செய்தித் தொடர்பாளர் அகமது-அல்-ஷாத்தி தெரிவித்தார். (பி)

## மக்களைப் பாதுகாப்பதை விட

# எண்ணெய்க் கிணறுகளிலேயே பிரி. படைகளுக்கு அக்கறை

## மன்னிப்புச்சபை கண்டனம்

(பக்தாத்)

ஈராக்கில் மக்களைப் பாதுகாப்பதை விட எண்ணெய்க் கிணறுகளை பாதுகாப்பதிலேயே பிரித்தானியப் படைகள் அதிக கவனம் செலுத்துவதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக லண்டன் தலைமையகத்தில் இருந்து சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் ஜலின்ஹான் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், ஈராக்கின் மருத்துவ மற்றும் குடிநீர் விநியோக சேவைகள் சீரமைக்கப்பட வேண்டும் என்றும், கொள்ளையடிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

விடுதலை செய்யப்போவதாகவும் உரிமைகளைப் பாதுகாக்கப் போவதாகவும், கூறி ஒரு நாட்டிற்குள் நுழையும் எந்த நாடும் அந்த நாட்டில் உள்ள மக்களைப் பாதுகாப்பது அவசியமாகும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் குர்திஷ் ஜனநாயகக் கட்சியும், குர்திஷ் தேசபக்திக் கூட்டணியும், ஈராக்கின் புதிய நிர்வாகத்தில் பங்கு பெறுவதை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது.

1991ஆம் ஆண்டு இடம்பெற்றவளைகுடாப் போரின் பின்பு மனித உரிமை மீறலுக்கும், பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கும் இந்த அமைப்புகள் காரணமாக இருந்தன என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. (பி-2)



சண்டையில் கொல்லப்பட்டதனது இளம் சகவீரரின் அடக்க ஆராதனையின் போது கண்களை கையால் மறைத்து அழும் அமெரிக்கவீரர்.

# ஈராக் தலைவர்களுக்கு அடைக்கலம் தரவில்லை

## சிரியா மீண்டும் மறுப்பு

(வாஷிங்டன்)

ஈராக் தலைவர்களுக்கு அடைக்கலம் அளிக்கவில்லை என்று அமெரிக்காவுக்கு சிரியா மீண்டும் பதில் அளித்துள்ளது.

பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை வைத்துள்ளதாகக் கூறப்படும் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து விரட்டி அடிப்பதற்காக ஈராக் மீது அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் இராணுவ வீரர்கள் கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் குண்டுகளையும் ஏவுகணைகளையும் வீசி தாக்குதல் நடத்தி வந்தார்கள்.

அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் தாக்குதலில் ஈராக் தலைநகர் பக்தாத் கடந்த வாரம் அமெரிக்கா வசமானது. ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் இவரதுமகன்கள் குவாசே, உதாய் ஆகியோரது அரண்மனைகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் உட்பட பல்வேறு முக்கிய தலைவ்கள் சியாவில் தஞ்சம் அடைந்திருக்கலாம என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. சிரியாவிடம் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் அழிக்க வேண்டும் என்றும், அமெரிக்கா கூறியுள்ளது.

இருப்பினும் சிரியாவின் பதிலை அமெரிக்கா ஏற்க மறுத்து வருகிறது. பேரழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை சிரியா அழிக்க வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் கூறியுள்ளது. இதனால் சிரியா மீது அமெரிக்கா போர் தொடுக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையால் வளைகுடாப் பகுதிகளில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.(பி)

# யு.எஸ்– வடகொரியப்பேச்சு சீனாவில் அடுத்தவாரம்

(பெய்ஜிங்)

வடகொரியாவும் அமெரிக்காவும் அடுத்த வாரம் நேரடிப் பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளன.பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுவார்த்தையில் சீனப்பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் நிலவி வந்த பதற்றமான சூழ்நிலை இப்பேச்சுவார்த்தை மூலம் தவிர்க்கப்படலாம் என்றும் நம்பப் படுகிறது.

ஏப்ரல் 23ஆம் திகதி இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்றும், அமெரிக்கப் பிரதிநிதியான அந்த நாட்டின் பிரதி இராஜாங்கச் செயலாளர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ளார் என்று அமெரிக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பி-2)

# அமெரிக்க ஆதரவு அரசியல்வாதி ஈராக் திரும்பினார்

(பக்தாத்)

அமெரிக்க ஆதரவு பெற்ற ஈராக்கிய அரசியல்வாதி அகமட் சலாபி நேற்று முன்தினம் பக்தாத் சென்றடைந்துள்ளார்.

1958இல் குடியாட்சி கவிழ்க்கப்பட்ட போது பக்தாத்தை விட்டுச் சென்ற இவர், தற்போதே பக்தாத் சென்றுள்ளார்.

ஈராக்கை விட்டுச் சென்றுள்ள அரசியல்வாதிகளில் சதாம் ஹுசைனின் அரசாங்கம் கடந்த வாரம் கவிழ்ந்ததையடுத்து மீண்டும் அங்கு செல்லும் முதலாவது அரசியல்வாதியான இவர் ஈராக்கின் தேசிய காங்கிரஸின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

# புஷ்ஷின் தந்தையைக் கொல்லத் திட்டம் தீட்டியவர்

(வாஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் அதிபரும் தற்போதைய அதிபர் புஷ்ஷின் தந்தையுமான சீனியர் புஷ்ஷை 1993ஆம் ஆண்டு கொல்ல சதித்திட்டம் தீட்டியதில் முக்கிய பங்கு வகித்த பாரூக் ஹிசாசி சிரியாவில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏஎப்பிக்கு அளித்த பேட்டியில் பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க உயர் அதிகாரி இதைத் தெரிவித்தார். (பி-2)

# பாக். நாடாளுமன்றில் முஷாரப்புக்கு எதிராக அமளி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பை எதிர்த்து நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் கள் கடந்த செவ்வாய்க்கிழமை அமளியில் ஈடுபட்டனர். அவை அலுவல்கள் நடைபெறாமல் தடுத்தனர்.

அதிபர் முஷாரப்புக்கு வானளாவிய அதிகாரம் வழங்கும் சட்டத்திருத் தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முஷாரப்புக்கு எதிராகவும் உறுப் பினர்கள் கோஷம் எழுப்பினர்.

அவைத் தலைவரின் இருக் கையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முற்றுகையிடடனர். இதையடுத்து அவையை இன்று வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைத்தார் அவைத் தலைவர். (பி)

## இன்று ஒரு தகவல்

# பிறருக்காகவும் உதவி!

அந்தக் காலத்தில் எத்தனையோ முனிவர்கள் இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள். அதில் கனாதர் என்று ஒரு ரிஷி. அவ்வப்போது அவரிடம் பலர் உபதேசம் பெறுவதற்காக வருவது உண்டு. ஒரு நாள் அது மாதிரி நாலுபேர் அவரைத் தேடிக்கொண்டு வந்தார்களாம். முனிவர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார். "நாளைக்குக் காலையில் சூரியன் உதயமாகிற சமயத்தில் இங்கே வாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டார். சரி என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அடுத்தநாள் காலையில் முனிவர் சொன்ன நேரத்துக்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் இந்த முனிவர்ஒரு பெரியயாகம் பண்ணிக் கொண்டிருந்தார். வந்த நால்வரும் அதைப்பார்த்து விட்டு அவருக்கு ஒத்தாசை பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

யாகம் முடிவதற்கு வெகுநேரம் ஆகிவிட்டது. இந்த நால்வரும் காலையில் வந்தவர்கள் இதுவரையும் சாப்பிடவே இல்லை. பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. என்ன பண்ணலாம் என்று யோசித்தார்கள். "சரி வீட்டுக்குப்போய்ச் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் வரலாம்" என்று நினைத்துப் புறப்பட்டார்கள். முனிவர் அவர்கள் புறப்படுவதைப் பார்த்தார். உடனே தடுத்து நிறுத்தினார். நீங்கள் எதற்கு வீட்டுக்குப் போக வேண்டும்? இங்கே ஆச்சிரமத்திலேயே சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். ஆதலால் நீங்கள் உடனே ஆச்சிரமத்திற்குப் போங்கள். நான் பின்னால் வருகிறேன் என்றார்.

இதைக்கேட்டவுடன் அந்த நால்வரும் ஆச்சிரமத்துக்குப் போனார்கள். அங்கே வாசலில் ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருந்தார்கள். இவர்கள் கை, கால்களைக் கழுவிவிட்டு உள்ளே நுழையப்போனார்கள். அந்தச் சமயம் பார்த்து அங்கேயிருந்த நான்கு முரட்டு ஆசாமிகள் அவர்களின் முன்னால் வந்து நின்றார்கள். "இங்கே சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியமம் உண்டு. என்ன தெரியுமா? இதோ பாருங்கள். இந்த மூங்கில் சிம்புகளை உங்கள் முழங்கையில் வைத்துக்கட்டிவிடுவோம். அதற்கு நீங்கள் சம்மதிக்கவில்லையென்றால் உங்களைக் கொன்று விடுவோம்" என்றார்கள். அப்படிச்சொல்லியதோடு நிற்கவில்லை. கத்தியை வேறு எடுத்துக்காட்டினார்கள். அதன் பின்னர் இவர்கள் என்ன, வேண்டாம் என்றா சொல்ல முடியும்?

பயந்து கொண்டு கையை நீட்டினார்கள். அவர்கள் மூங்கில் சிம்பை வைத்துக் கட்டினார்கள். இவர்கள் எல்லாரும் நீட்டியகையை மடக்கமுடியவில்லை. அப்படியே உள்ளே போனார்கள். நான்கு இலைகள் எதிரும் புதிருமாகப் போட்டிருந்தார்கள். அவற்றில் பலகாரங்கள் வைத்திருந்தார்கள். லட்டுகளும் இருந்தன. இலைக்கு முன்னால் உட்கார்ந்தார்கள். இருந்தாலும் எப்படிச் சாப்பிட முடியும்?அது தான் கையில் சிம்பு வைத்துக் கட்டியிருக்கிறார்களே. முழங்கையை மடக்க முடியவில்லை. அவர்கள் பாட்டுக்கு உட்கார்ந்திருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் முனிவர் உள்ளே வந்தார். "என்ன இது? ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்? கூச்சப் படாமல் சாப்பிடுங்கள்..." என்றார். இவர்களுக்கு எரிச்சலாயிருந்தது. "முழங்கையை மடக்க முடியவில்லை" "எப்படிச் சாப்பிடுவது?" என்றார்கள் இவர்கள். இதைக் கேட்டதும் முனிவர் சிரித்தார். அவர்களைப் பார்த்து "இதோ பாருங்கள்... உங்கள் கையிலிருக்கிற லட்டு உங்கள் வாய்க்குத்தான் போகவேண்டும் என்ற அவசியமில்லையே! அந்த லட்டு எதிர்த்தரப்பிலே உட்கார்ந்திருப்பவன் வாய்க்கும் போகலாமே! அதே மாதிரி எதிரில் இருக்கிறவன் கையில் இருக்கிற லட்டு உங்கள் வாய்க்குள்ளே போகலாமே" என்று சொன்னார்.

அப்பொழுதுதான் இவர்களுக்குப் புத்திவந்தது. முழங்கையை மடக்க முடியாமல் கட்டியிருந்தாலும் அடுத்தவன் சாப்பிடுவதற்கு அது உபயோகப்படுமே என்பது புரிந்தது. முனிவர் சிரித்துக் கொண்டே, "உங்களுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுப்பதற்குத்தான் இப்படிப் பண்ணினேன். நாம் சம்பாதிக்கிற பணம் நமக்குத்தான் பயன்பட வேண்டுமென்பதில்லை. அது மற்றவர்களுக்கும் உபயோகப் படலாம். அடுத்தவர்களின் பணம் நமக்கும் உபயோகப் படலாம். ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பது தான் வாழ்க்கை. அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி முழங்கையைக் கட்டி உங்களைச் சாப்பாட்டிலே உட்காரவைத்தேன்" என்று சொன்னார்.

நமது ஆள் ஒருவர் ஒரு நல்ல உத்தியோகத்தில் இருப்பவர், இந்தக் கதையைக் கேட்டுவிட்டு "சார்... எனக்கு கையில் மூங்கில் சிம்பு வைத்துக் கட்டவேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை சார்! ஏனென்றால் நான் சாதாரணமாக முழங்கையை மடக்க வேண்டிய சந்தர்ப்பமே வருவதில்லை என்று சொன்னார். "அது எப்படி?" என்று கேட்டேன். "நான் எப்போதுமே அடுத்தவர்கள் பையிலிருக்கின்ற பணத்தை எடுப்பது தான் வழக்கம்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்


## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட தீவுப் பகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்
பிரதம அமைப்பாளரும் சட்டத்தரணியும் சமாதான நீதவானுமாகிய

### அமரர் பசுபதிப்பிள்ளை கதிரவேலு

அவர்களின் திடீர்மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

183, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா
சுதந்திரக் கட்சி

(C/6053)


# அரசைக்காக்கும் பொறுப்பு தமிழ்க் கூட்டமைப்புக்கு உண்டு

## ஜோசப் பரராஜசிங்கம் கருத்து

(கொழும்பு)

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் அரசாங்கத்தை எவராவது கவிழ்க்க முயன்றால அரசைக் காப்பாற்றும் பொறுப்பு கூட்டமைப்பிற்கு உண்டு. எனவே கூட்டமைப்பு அப்பணியைச் சரிவர மேற்கொள்ளும்.

இவ்வாறு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மூதூரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான எம்.ஏ. எம். மஹ்ருப் பிற்கும் இடையில ஏற்பட்டுள்ள முறுகல் நிலையினையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் அவசரம அவசரமாக பல்வேறு கூட்டங்களை நடத்திவருகின்ற நிலையில் அரசாங்கத்துக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டால் கூடடமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி விளக்கம் அளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் கருத்துக் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையினை குழப்பும் வகையில் தற்போதைய அரசாங்கத்தை எவராவது கவிழ்க்க முற்பட்டால் அரசை காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு. சமாதான முயற்சியை காப்பாற்றுவதற்காக அரசை கூட்டமைப்பு பாதுகாக்கும என்றார். (உ-10)

## இராசி பலன்

18.04.2003
(சித்திரை 5, வெள்ளி)
துதியை மு.இ 9.13 வரை
சுபாதி காலை 7.10 வரை
விசாகம் வை 5.33 வரை
இராகுகாலம் 10.33 - 12.03
சுபநேரம் 6.03 - 7.33
பெரிய வெள்ளி

**மேடம்**
தேக சௌக்கியம், கீர்த்தி, காரிய அனுகூலம், வாகனசுகம்

**இடபம்**
விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, தேக நலன், காரிய அனுகூலம், உறவினர் வருகை

**மிதுனம்**
பணக்குறைவு, அஜரணரோகம், கௌரவக குறைவு, மனக்கவலை

**கடகம்**
புத்திசஞ்சலம், தனநாசம், காரிய தாமதம், தொழில் நிலை மாற்றம்

**சிங்கம்**
புதிய பொருள் சேர்க்கை, நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய அனுகூலம்

**கன்னி**
அதிக செலவு, எந்தக் காரியத்திலும் தாமதம், அதிகாரிகள் வெறுப்பு, போசனசுகக்குறைவு

**துலாம்**
கௌரவம், வெகுமானம், தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும்

**விருச்சிகம்**
சோம்பல் நிலை, கீழ்ப்படிதல், முயற்சி தாமதம், கற்பனை மிகுதி

**தனுசு**
சிநேகிதர் நல்வரவு, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும், தெய்வதரிசனம்

**மகரம்**
பிரபுத்தனம், பெரியோரால் மதிக்கப் படல், இஷ்டசித்தி, தொழில் நன்மை

**கும்பம்**
நர்ப்பந்திக்கப்படல், வயிற்றுக் கோளாறு, எதிர்பாராதசெலவு, உத்தியோகக கஷ்டம்

**மீனம்**
காரிய தடங்கல், மனக்கவலை, சரீர பீடை, எதிர்பாராத அச்சம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள்

## நிக்கோட் வழங்கியது

(கொழும்பு)

நிக்கோட் நிறுவனம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன்வடக்கு-கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 16 அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியுள்ளது.

இவ்வண்டிகளை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநாின் பணிமனையில் வைத்து, மாகாண சுகாதார அமைச்சின்செயலாளர் எம். ரத்னாயக்காவிடம், நிக்கோட் நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் லங்கா நேசன் கையளித்தார்.

இவ் அன்புலன்ஸ் வண்டிகள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (உ-8)

## யாழ். போதனாவைத்தியசாலை

# வெளிநோயாளர் பிரிவில் வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சௌக்கிய கல்வித்திட்டத்தின் கீழ் புத்தாண்டு தினத்தன்று தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தினமும் சமூகத்துக்கு நல்ல கருத்தூட்டம் மிக்க திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதால் அங்கு வரும் நோயாளர் அதனைப் பார்வையிடுமிடத்து உளவியல் ரீதியான நல்லதோர் மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

தவிரவும், வைத்தியரிடம் காட்டும் தமது முறை வரும்வரை நோயாளர்கள் இங்கு காண்பிக்கப்படும் திரைப்படங்களில் புலனைச் செலுத்துவதால் வழமையில் அவர்களிடையே ஏற்படும் நான் முந்தி, நீமுந்தி சலசலப்பு ஓய்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. (உ-7)

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட் பின்றி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை

# வலம்புரி

## சபாஷ் இந்தியா

இலங்கை இன விவகாரத்தில் இனிமேல் தலையிட மாட்டேன் எனக்கூறிய இந்தியா இலங்கைக்கு உதவும் நாடுகளின் முன்னோடி மாநாடு அமெரிக்காவில் நடை பெற்ற போது அதில் கலந்து கொண்டு நிதிஉதவி வழங்கவும் முன் வந்துள்ளது.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் புனரமைக்கவும் அப்பகுதியில் மக்களை மீள் குடியமர்த்தவும்,தேவையான நிதியை வழங்க உலக நாடுகள் பல முன் வந்துள்ளன.இதற்கான ஏற்பாட்டை நோர்வே அரசு மேற் கொண்டிருந்தது.இலங்கைக்கு உதவி வழங்குமாறு நோர்வே விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்ட உலக நாடுகள் இலங்கைக்கு உதவி செய்யப் போட்டி போட்ட வண்ணம் இருப்பது ஒரு புறத்தில் வியப்பையும், மறு புறத்தில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதில் இந்தியா கலந்து கொண்டு நிதியுதவி வழங்குவது ஆச்சரியம் மட்டுமல்ல, அதற்குள் பின் நோக்கமும் இருப்பது புலனாகிறது. இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையை தனது நாட்டில் நடத்துவதற்கு மறுப்புத் தெரிவித்த இந்திய அரசு, இப்போது இலங்கையின் சமாதான முயற்சி வெற்றி அடையும் என்ற நம்பிக்கையில் நிதியுதவி வழங்க முன்வந்திருப்பதன் நோக்கம் என்ன?என்பது ஆய்வுக்குரியது.

அரசு-புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றி அடையாது என ஆரம்பத்தில் கருதிக்கொண்ட இந்தியாவிற்கு இப்போது ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நகர்வடைந்த நிலையில் ஓர் நம்பகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.இந் நிலையில் இலங்கை இனப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டு

# மனித மீட்பிற்காக சிலுவையில் தியாகம் செய்த இயேசுவை நினைத்து நாம் உள்ளன்பு கூர்வோம்

உலகெங்கும் பரந்துவாழும் கிறிஸ்தவர்களுக்கு பெரிய வெள்ளி ஒரு புனித நாளாகும். ஏனென்றால் இன்று தான் ஆண்டவர் இயேசு மனித குல ஈடேற்றத்திற்காக தன் உயிரையே தியாகம் செய்த புனித நாள். உலகெங்கும் அன்பின் ஒளி பிரகாசித்து பரவ தன் வாழ்வையே தீபமாக்கிய திருநாள். உண்மையும், நீதியும், சமாதானமும், சமத்துவமும் உலகத்தில் நின்று நிலைக்க அந்த உண்மைக்கு உயிர் கொடுக்க தன்னுயிரையே தாரை வார்த்த

### புனித பெரிய வெள்ளி

தியாகத்தின் இறப்பு தினம் இன்று. பல வடிவங்களில் பற்பல மனிதர்களுக்கு வாழ்வளித்து வழிகாட்டியவருக்கு இவர் ஒரு நிரபராதி, குற்ற மற்றவர் என்று ஒருவர் கூட முன்வந்து சொல்லத் துணியாத பரிதாபக் காட்சியோடு ஆண்டவர் இயேசு இரு கள்வர்கள் நடுவிலே சிலுவையில் அறையப்பட்டார். இந்த இறைமகனுக்கு, இந்த மாமனிதனுக்கு இடைக்கால தடை வாங்க அன்று அந்தச் சூழலில் யாருமில்லை. அவரால் குணம் பெறவும், புதுவாழ்வு பெறவும், அப்பம் உண்ணவும் என இவருக்குப் பின்னால் அலை அலையாகத் தடம்புரண்டோடிய மக்கள் கூட்டம் இவருக்காக ஒரு பேரணியோ போராட்டமோ நடத்தவும் இல்லை, நடத்த முன்வரவும் இல்லை. இது தான் நன்றி மறந்த நம் உலகம். ஒருவனின் இன்பத்தை இரட்டிப்பாக்க பலர் அங்கு நிற்பர். ஆனால் அவன் துன்பப்படுகின்றபோது அவனின் துன்பத்தில் பங்கெடுக்க, அவன் அழுகின்ற போது அவன் அழுகையை துடைக்க, ஆறுதல் கூற மனிதருக்கு தட்டுப்பாடு வருவது அன்று மட்டுமல்ல. இன்றும் கூட எம் சமூகத்தின் அவல நிலையும் இதுதான்.

### *மீட்பின்கருவி சிலுவை*

அன்றைய நாளிலே சிலுவையானது ஓர் அவமானத்தின் சின்னமாகத்தான் கருதப்பட்டது. ஏனென்றால் பல்வேறு விதமான குற்றங்களைப் புரிந்தவர்களையும், நாட்டு துரோகிகளையும் தண்டிக்க பாவித்த ஒரு தூக்குமேடையாக அது காணப்பட்டது. ஆனால் ஆண்டவர் இயேசு உலக மக்கள் அனைவரும் மீட்புற மானிட ஈடேற்றத்திற்காக அந்தச் சிலுவையை தன் தோளில் தூக்கி சுமந்து அதிலே தொங்கி இறந்ததன் வழியாக மனுக்குலத்திற்கு மீட்பைப் பெற்றுத் தந்தார். இதனூடாக அது வரை காலமும் அவமானத்தின் சின்னமாக விளங்கிய சிலுவை இயேசுவின் மரணத்தினால் மகிமை பெற்று மீட்பின் கருவியாக மாறி வெற்றியின் சின்னமாக வாழ்வின் ஊற்றாக உருமாறியது வரலாற்று உண்மையாகும். சிலுவை என்ற வெற்றியின் சின்னமானது ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையிலும் நடப்பட்டிருக்கும் ஏனென்று சொன்னால் சிலுவை என்ற இந்த நம்பிக்கையின் மரமானது துன்பத்தால் துடிதுடித்து வாழுகின்ற மக்களுக்கு துயரம் அவர்களை வாட்டுகின்ற பொழுது கவலையால் கால்கள் தள்ளாடி நடக்கப் பலமில்லாது மாறுகின்ற போது சுற்றம் சூழலால் மறுதலிக்கப்பட்டு மறக்கப்பட்டு விளிம்பில் தள்ளப்படுகின்ற போது தோல்விகளை வாழ்க்கை தோரணங்களாக்கி வேதனையின் விளிம்பில் விரக்தியோடு நிற்கும் நெஞ்சத்திற்கு அன்பும், ஆறுதலும், அரவணைப்பும் அள்ளிக் கொடுக்கும் நிழல்தான் இந்தச் சிலுவை மரம். விரக்தியடைந்த மனித மனங் களுக்கு வீசும் நல்தென்றலாக சிறுமை அடைந்த மனங்களுக்கு சிந்தையை குளிர வைக்கும் நல் சின்னமாக இந்த சிலுவை காணப்படுகின்றது.

### *வெற்றியின் மகத்துவம்*

இந்தப் பெரிய வெள்ளியன்று மனித மீட்புக்காக தன் உயிரை சிலுவையிலே தியாகம் செய்த ஆண்டவர் இயேசுவை உற்று நோக்குகின்ற ஒவ்வொரு உளளத்திற்கும் அந்தச் சிலுவையானது அவனின் வேதனை துன்பங்களையெல்லாம் குறைத்து மறக்கச் செய்து மன அமைதியையும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. எப்படி வாழ வேண்டும் என நல்ல அறிவு புகட்டுகிறது. எனவே தான் இந்தச் சிலுவையானது தனியே வெறும் மரமல்ல. மாறாக இது வாழ்க்கையின் வெற்றியின் இரகசியத்தை கற்றுத் தரும் நல்ல உயிருள்ள நண்பன். சிலுவை இல்லாமல் இயேசு மட்டும் வேண்டுமென்று கூறுவது மடமை. இயேசு இல்லாத சிலுவை மட்டும் வேண்டுமென்று கூறுவதும் மடமை. மாறாக உண்மையான ஒரு கிறிஸ்தவன் சிலுவை இல்லாத இயேசுகிறிஸ்து என் மீட்பராக இருக்க முடியாது என்று தாம் கூறுவான். எனவே தான் தூய பவுல் நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்ட மாட்டேன் என்று கூறுவதைப் போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் சிலுவையைக் குறித்தே பெருமை பாராட்ட வேண்டும. ஏனென்றால் வெற்றியின் மகத்துவம் இந்த சிலுவையிலே தான் அடங்கியிருக்கின்றது.

### *நல்ல சிந்தனைகள் வேண்டும்*

புனித வெள்ளியாகிய இன்று எம் மீட்பர் ஆண்டவர் இயேசு சிலுவையிலே அன்று அறையப்பட்டு உயிர் துறந்தார். ஆனால் இன்று எம் சமூகத்திலும் பல்வேறு சிலுவைச் சாவுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அதன் வடிவங்கள் தான் உருமாறியுள்ளன. பல அப்பாவி ஏழை எளிய மக்கள், கைவிடப்பட்டோர், அனாதைகள் நாளாந்தம் சிலுவையிலே அறையப்பட்ட வண்ணமே உள்ளனர். நாங்கள் எங்களுடைய வார்த்தைகளால், சொல் ஆணிகளால் பல நம் சகோதரங்களை ஒவ்வொரு நாளும் சிலுவையிலே அறைகின்றோம் அல்லது அதற்கு துணை நிற்கின்றோம். மாறாக இன்றைய புனித நாளிலே நம் சகோதரங்களின் அயலவர்களின் சிலுவையை குறைக்கின்ற மக்களாக மாறுவோம். இதற்கு முதலில் எம் உள்ளத்தில் நல்ல சிந்தனைகளையும் நல்ல எண்ணங்களையும் கட்டியெழுப்பி நல்ல உள்ளம் படைத்த மக்களாக மாறுவோம்.

சகோ.எவ்.றஞ்சிற் ரூஸ்வோல்ட் அ.ம.தி

# எதிர்காலம் பற்றிய சிறுவர்களின் சிந்தனைக்கான 4 நாள் பட்டறை

## 22 முதல் 25 வரை கண்டியில் நடைபெறும்

சிறுவர் தொடர்பு (கிட்) அமைப்பின் நான்கு நாள் பட்டறை நிகழ்வொன்று கண்டியில் இம்மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. சிறுவர்களுக்கு உரையாடல், பங்கு பற்றுதல், ஆக்கவியல் மற்றும் நாடு முழுவதும் உள்ள சிறுவர்களுக்கிடையில் நல்லுறவை வளர்த்தல் போன்ற குறிக்கோள்களுடன் இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது. இந்த நான்கு நாள் பட்டறையில் 'கிட்' அமைப்பின் திட்டங்களுக்கமைவாக சிறுவர்கள் ஒன்றுகூடி எதிர்கால நடவடிக்கைகளுக்கான முன் யோசனைகளை உருவாக்குவார்கள். அவர்கள் தமது அனுபவங்களைப் சமாதானம் பற்றிய தமது சிந்தனைகள், எதிர்காலம் பற்றிய கற்பனைகள் போன்றவைகளை வெளிக்காட்டும் பெரிய அளவிலான சுவர் காட்சி அமைப்புக்களையும் உருவாக்குவார்கள். இவை ஆஸ்திரேலியா மல்போனில் நடைபெறவிருக்கும் (Global Mural project) உலக சுவர் ஓவியக் காட்சியிலும் இடம்பெற வாய்ப்புண்டு. உளளூர் பொருட்களைப் பயன்படுத்தி கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான பொருள்களையும் அவர்கள் ஆக்குவார்கள். இறுதி நாள் நிகழ்வில் இவை காட்சியில் வைக்கப்படும். நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த சிறுவர்களை ஒன்றாக இணைத்து உரையாட வைத்து கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறச் செய்து அவர்களுக்கிடையில் நெடுங்கால உறவுகளையும் புரிந்துணர்வுகளையும் வளர்ப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதற்காக நவீன தொழில்நுட்பம் உட்பட பல்வேறு செயலாக்க முறைகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. 12இல் இருந்து 18 வயதினருக்கிடையிலான சிறுவர்க்ளைக் கருத்தில் கொண்டே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, வெலிஓயா, கண்டி, தெனியாய மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுனசிலுடன் சேர்ந்து 'இலங்கையில் சிறுவர்களை காப்பாற்றுங்கள்' **(Save the Children in Srilanka)** அமைப்பு இத்திட்டத்தை 2001ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஆரம்பித்தது.

இம்மாதம் இடம்பெறும் பட்டறையின் இறுதி நாள் நிகழ்வுகள் 25ஆம் திகதி கண்டி குண்டசாலையிலுள்ள சுற்றாடல் பாதுகாப்புக்கும் பல்லின உயிரி பாதுகாப்புக்குமான மன்றக்கட்டடத்தில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றன. (பி)

வெற்றி அடையாது என ஆரம்பத்தில் கருதிக்கொண்ட இந்தியாவிற்கு இப்போது ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நகர்வடைந்த நிலையில் ஓர் நம்பகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் இலங்கை இனப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டு சமாதானம் ஏற்பட்டால்அதில் இந்தியாவின் பங்களிப்பு பூச்சியமாகவே இருக்கும். இது அண்டை நாடான இந்தியாவிற்கு அழகல்ல.

அது மட்டுமன்றி, இலங்கைக்குள் அமெரிக்காவின் ஆதிக்கம் ஏற்படுவதற்கும் இது வழிவகுத்து விடும்.இதன் காரணமாகவே இந்தியா இலங்கைக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

உலக நாடுகள் வழங்குகின்ற நிதியுதவியானது விடுதலைப் புலிகளின் உதவியுடனேயே அபிவிருத்திப் பணிக்குப் பயன்படுத்தப்படவுள்ளது. அதாவது அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்தே உலக நாடுகளின் நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இதில் இந்தியா வழங்குகின்ற நிதியும் அடங்கும்

அதாவது விடுதலைப் புலிகளோடு இணைந்து புனரமைப்புப் பணியை இலங்கை அரசு மேற் கொள்வதனை ஏற்றுக் கொண்டே இந்திய அரசு நிதி உதவியை வழங்குவதெனில் விடுதலைப் புலிகளை இந்தியா இப்போது அங்கீகரித்துள்ளதென்பதே பொருளாகும்.

முழுவதும் உள்ள சிறுவர்களுக்கிடையில் நல்லுறவை வளர்த்தல் போன்ற குறிக்கோள்களுடன் இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது. இந்த நான்கு நாள் பட்டறையில் 'கிட்' அமைப்பின் திட்டங்களுக்கமைவாக சிறுவர்கள் ஒன்றுகூடி எதிர்கால நடவடிக்கைகளுக்கான முன் யோசனைகளை உருவாக்குவார்கள். அவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். புரிந்துணர்வுகளை கட்டமைக்கவும் குழுமங்களுக்கிடையில் தொடர்புகளை அதிகரிக்கவுமான மேலதிக வாய்ப்புக்களை அவர்கள் கண்டறிவார்கள். 'கிட்வெப்' (**Kit Web pages**) பக்கங்களையும் அவர்கள் வடிவமைப்பார்கள். தங்கள் தகவல்களை பகிர்ந்து கொள்ள இதனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும் திட்டமிடுவார்கள். சிறுவர்கள் தமது சுற்றாடல், தமது விழாக்கள், தமது விருப்பங்கள், **bal Mural project)** உலக சுவர் ஓவியக் காட்சியிலும் இடம்பெற வாய்ப்புண்டு. உளளூர் பொருட்களைப் பயன்படுத்தி கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான பொருள்களையும் அவர்கள் ஆக்குவார்கள். இறுதி நாள் நிகழ்வில் இவை காட்சியில் வைக்கப்படும். நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து பல்வேறு பிரதான நோக்கமாகும். இதற்காக நவீன தொழில்நுட்பம் உட்பட பல்வேறு செயலாக்க முறைகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. 12இல் இருந்து 18 வயதினருக்கிடையிலான சிறுவர்க்ளைக் கருத்தில் கொண்டே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, வெலி அமைப்பு இத்திட்டத்தை 2001ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஆரம்பித்தது.

இம்மாதம் இடம்பெறும் பட்டறையின் இறுதி நாள் நிகழ்வுகள் 25ஆம் திகதி கண்டி குண்டசாலையிலுள்ள சுற்றாடல் பாதுகாப்புக்கும் பல்லின உயிரி பாதுகாப்புக்குமான மன்றக்கட்டடத்தில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றன. (பி)

# படைத்தளம் அமைக்கும் இடம் குறித்து அடுத்தவாரம் கூட்டமைப்புடன் பேச்சு

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மத்தியிலுள்ள 51வது படைத்தளத்தை தற்போது அமைந்துள்ள இடத்திலிருந்து அகற்றி யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான சுப்ரமணியம் பூங்காப் பிரதேசத்தில் அமைப்பதற்கு எடுத்த முடிவை செயற்படுத்தாது மேற்படி படைத் தலைமையகத்தை வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கான தீர்மானமொன்றை பாதுகாப்பு அமைச்சு எடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

படைத்தலைமையகத்தை அமைப்பதற்கு தேர்ந்தெடுக்கும் இடம் தொடர்பாக அடுத்த வாரமளவில் தமிழ் கூட்டமைப்பினருடன் பேச்சு ஒன்றை நடத்தி, அதன் பின்னரே இதுபற்றிய இறுதியான முடிவொன்றை பாதுகாப்பு அமைச்சு எடுக்கும் என்றார்.

இதேவேளை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தமக்கு இதில் உடன்பாடு இல்லையென்றும் யாழ். மாநகர சபைக் காணியிலேயே படைமுகாம் அமைக்க வேண்டும் என்றும் அண்மையில் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## தினசரி தியானம்

### பாசமும் பக்தியும்

உடல் அல்லது தோலை நேசித்தல் பாசம் எனப்படும். இறைவனை நேசித்தல் பக்தியாகும். பக்தி என்பது தூய்மையான அன்பு. தெய்வத்தன்மை உடையது. ஏதாவது ஒன்றைப் பெறுவதற்காக ஒருவரிடம் காட்டும் அன்பு சுயநலமானது. அது பாசமாகும். அது இவ்வுலகுடன் பிணைக்கும் தன்மையானது. பகவான் நாராயணனிடம் அன்பு காட்டுவது போல எல்லா உயிரினங்களையும் நேசிக்க வேண்டும். இதுவே தெய்வீக அன்பு. விடுதலைக்கு வழிகாட்டும். இதயத்தைத் தூய்மைப் படுத்தும். தெய்வாம்சம் பொருந்தியவராக்கும்.

**சுவாமி சிவானந்தர்**

# க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பப் பிரிவு அறிமுகம்

(கொழும்பு)

க.பொ.த (உ/த) பாடத்திட்டத்தில அடுத்த மாதம் முதல் தொழில்நுட்பப் பிரிவு அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது.

உயர்கல்விப் பாடத்திட்டத்தைப் பயனனுள்ளதாகவும், கருத்தாளம் மிக்கதாகவும் ஆக்குவதே தொழில்நுட்பப் பிரிவை அறிமுகப்படுத்துவதன் நோக்கமென தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கே.வி.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் தொழில்நுட்பம் சம்பந்தமாக ஆறு பாடங்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து இவ் ஆறு பாடங்களையும் உள்ளடக்கிய, தொழில்நுட்பம் ஒரு பிரிவாக உயர்தரப் பாட விதானத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. (உ-8)

### க.பொ.த (உ/த) பரீட்சை

# அனுமதி அட்டையில் உள்ள வழுக்கள் பற்றி முறையிடலாம்

(கொழும்பு)

இம்முறை நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கென பரீட்சாரத்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகளில் பாடமாற்றம் மற்றும் பரீட்சார்த்தியின் பெயர் மாற்றம் செய்யப்படுவது குறித்த முறைப்பாடுகளை உடனடியாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தருமாறு பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21ம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் இம்முறை சுமார் 2,12,194 பாடசாலை பரீட்சார்த்திகளும், 39,533தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்ற உள்ளனர்.

நாடு பூராவும் 1781 நிலையங்களில் நடைபெறவுள்ள இப் பரீட்சை மே மாதம் 17ம் திகதி வரை நடை பெறவுள்ளது.

இதே சமயம் மே மாதம் 13, 14,15ம் திகதிகளில் வெசாக் தினத்தை முன்னிட்டு பரீட்சைகள் நடைபெற மாட்டாது எனவும் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(உ-10)

### ஐ.தே.மு........

விக்கிரமசிங்கா மூதூருக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பது எனவும் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியில உள்ள முஸ்லிம் எம்.பிக்களுக்கும், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கும் இடை யிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதை அடுத்து அதிரடியான அரசியல் மாற்றங்கள் ஏற்படலாமென்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன. (ம)


## யாழ்ப்பாணம்-மாநகரசபை

### பெரிய கடை மரக்கறிச் சந்தைக்கான மீள் கேள்வி அறிவித்தல்-2003

கீழ்க்காணும் சந்தையை 2003ம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 31.12.2003 காலப் பகுதிக்கு குத்தகைக் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 250.00 செலுத்துவதன் மூலமும்.கீழ்க் குறிப்பிடப்படும் கேள்விப் பிணைப் பணம் செலுத்துவதன் மூலமும் கேள்விப் படிவங்களை 24.04.2003ந்திகதி பி.பகல்3.00மணி வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.கேள்விகள் யாவும் அன்றைய தினம் 3.30மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிற்பகல் 3.30 மணிக்கு கிடைக்கப் பெற்ற கேள்விகள்யாவும் திறந்து பரிசீலிக்கப்படும் பெரிய கடை மரக்கறிச் சந்தை கேள்வி சமர்ப்பித்து சித்தி பெறுபவர் அன்றைய தினமே அதன் பகுதிப்பணத்தைச் செலுத்தி ஒப்பந்தம் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| பெரியகடை மரக்கறிச் சந்தை | 10000/- | 252 000/- (வற் நீங்கலாக) |

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/6056)

## JAFFNA TECHNICAL, INSTITUTE
## JAFFNA, SRILANKA

REGD NO: 15251 T.P: 222 3335

## தொழிற் பயிற்சிகள்

★ RADIO, T.V .AND VIDEO DECK REPAIRING சகல இன ரேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள்,COMPUTER MONITOR, PRINTER, UPS என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.
(காலம் 10 மாதங்கள்)


## கலை விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் இன்று நடாத்தப்பட விருநத முத்தமிழ்க் கலை விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்படுவதாக சங்கச் செயலாளர் ஆ.கதிரமலைநாதன அறிவித்துள்ளார். (இ)

## ஜனாதிபதி சந்திரிகா பங்களாதேஷ் பயணம்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இரண்டு நாள்உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற் கொண்டு நாளை சனிக் கிழமை பங்களாதேஷ் பயணமாகவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது பங்களாதேஷ் ஜனாதிபதி பேராசிரியர் இஜீடீன் அகமட் வெளிநாட்டமைச்சர் மஷுட்கான் மற்றும் பங்காளதேஷ் பிரதமர் காலிதா ஸியா ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார். (உ-10)

---

### சைவச்.........

பினர் விநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களின் நலன் களைப் பேணும் வகையில் இடைக் கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது குறித்து ஆலோசிக்குமாறு இந்து சமயப் பேரவையை நீதிவான் கேட்டுக்கொண்டார்.

எனினும் இடைக்கால நிர்வாகம குறித்த ஆலோசனையை இந்து சமயப் பேரவை விரும்பாததை அடுத்தே நீதிவான் சிறுவர்களை வாழ்வகத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை வாழ்வகத்தில் ஒப்படைக்கப்படவுள்ள சிறுவர்களின் நலன்களைப் பேணும் வகையில் அவர்களுக்கான பராமரிப்பு நிதியத்தை இந்து கலாசார அமைச்சு வழங்கு மென்று அமைச்சர் தி. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(இ-4)

---

### பிரதமரை......

கேட்டிருந்தமை சம்பந்தமாகவே வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், ரவூப் ஹக்கீம் மீது கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக் கண்டனத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அமைச்சர் ரவூப் ஹக்கீமைப் பொறுத்தளவில் அவர் உறுதியான முடிவுகளை எடுக்காமல் அவசரப்பட்டு இத்தகைய முடிவுகளை எடுப்பது முறையற்றதாகும்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்துடன் உடன்பட்டு

### தமிழ்-முஸ்லிம்....

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மூவரின் சடலங்களும் அடையாளம் காணும் பொருட்டு சேருநுவர வைத்திசாலையில் வைக்கப்பட்டிருப்பதாக தோப்பூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பாலத்தோப்பு பொலிஸ் பகுதியில் நேற்றுமாலை இடம் பெற்ற இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் நிலவிய பதற்றத்தைத் தணிக்கும் பொருட்டு மேலதிக இராணுவம் அங்கு வரவழைக்கப்பட்டுள்ளது.

பாலத்தோப்புப் பகுதியில் இடம பெற்ற இம் மோதல் சம்பவத்தினால் முப்பதிற்கும் மேற்பட்ட வீடுகள் இனந்தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப்பட்டதுடன் இரண்டு வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களான அபிதா (வயது 44) யூசுப் (வயது 28) ஹமனூன் (வயது 24) ஆகிய மூவருமே திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறு காயங்களுக்குள்ளான பலர் தோப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபின் வீடு திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் குறிதது இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தின கருத்துத் தெரிவிக்கையில் சம்பவம் இடம் பெற்ற இடத்தில் காணப்பட்ட இனம் தெரியாத மூவரின் சடலம் மீட்கப்பட்டு சேருநுவர ஆஸ்பத்திரியில் அடையாளம் காணும்பொருட்டு வைக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவின் பணிப்பின் பேரில் இனக்கலவரம் வெடிக்காதவகையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு திருகோணமலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விஜயம் செய்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

---

### எல்லா........

படும். இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் பற்றியெல்லாம் எல்லா அரசியற் கட்சிகளும் எமக்குத் தெரிவித்த படியேயுள்ளன. அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இந்தியாவிற்கு விஜயம் செய்தமை இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்தியுள்ளன. இனப்பிரச்சினை காரணமாகஎத்தகைய அழிவுகள் ஏற்பட்டன என்பதும் இந்தியாவிற்குத் தெரியும் என்றும் இலங்கையின் அபிவிருத்திக்குத் தொடர்ந்தும் இந்தியா உதவும் என்றும் லலித் மன்சிங் மேலும் தெரிவித்தார். (இ)

★ RADIO, T.V .AND VIDEO DECK REPAIRING சகல இன றேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், COMPUTER MONITOR, PRINTER, UPS என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.
(காலம் 10 மாதங்கள்)

★ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING சகல இன மோட்டார், (f) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும்.
(காலம் 7 மாதங்கள்)

★ MOTOR CYCLE MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள் நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்
(காலம் 6 மாதங்கள்)

★ AIR CONDITIONING AND REFRIGERATION சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறைஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

★ CITY AND GUILDS OF LONDON EXAM
1.POWER 2.ELECTRONICS

# புதிய பயிற்சிகள் ஆரம்பம்

28-04-2003 (கிழமை நாட்களில்)

27-04-2003 ( சனி ஞாயிறு நாட்களில்)

மேலதிக விபரங்களுக்கு நேரில்.

(C/6058)

**DIRECTOR**

11/10 B, Stanly Road,
Jaffna (Near K.K.S. Road)

No-07 Palaly Road
Jaffna.

பொறுத்தளவில் அவர் உறுதியான முடிவுகளை எடுக்காமல் அவசரப்பட்டு இத்தகைய முடிவுகளை எடுப்பது முறையற்றதாகும்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்துடன் உடன்பட்டு எத்தகைய முடிவுகளை எடுத்தாலும் முஸ்லிம் காங்கிரஸின் மாற்று அணியில் உள்ள ஐந்து எம்.பிக்களும் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு அளித்து வருவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

THE ROYAL COLLEGE OF JAFFNA

"SPOKEN ENGLISH"

புதுப்பிரிவு ஆரம்பம்

426(302)K.K.S ROAD, JAFFNA

BLACK ROAD, CHANKANAI

ஏற்பட்டன என்பதும் இந்தியாவிற்குத் தெரியும் என்றும் இலங்கையின் அபிவிருத்திக்குத் தொடர்ந்தும் இந்தியா உதவும் என்றும் லலித் மன்சிங் மேலும் தெரிவித்தார். (இ)

---

## ரவூப் ஹக்கீமுக்கு...

எதிர்த்து பொதுஜன ஐக்கிய முன்னணி நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை விரைவில் கொண்டுவரவுள்ளது.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளது என்றார். (உ-10)

---

## கூட்டமைப்புடன்.....

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற உள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (உ-10)

## வங்கி அறிவித்தல்

**21.04.2003 திங்கட்கிழமையன்று**
**விசேட வங்கி விடுமுறை தினமாகும்**

கீழ்வரும் வங்கிகள் 21.04.2003 அன்று மூடப்பட்டிருக்கும் என வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
கொமர்ஷல் வங்கி
ஹட்டன் நஷனல் வங்கி
தேசிய சேமிப்பு வங்கி
செலான் வங்கி

(C/6055)

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.